பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 11 வியாழக்கிழமை 26.11.2020 கதிர் 21

இனி அது ரகசியம் அல்ல!

வினையை விலைக்கு வாங்குவது என்பார்கள்.

வானத்தில் போற பிசாசை வழி மறித்து, ஏணி வைத்து இறக்கி, மடியில் செருகிக் கொள்வது என்பார்கள்.

அப்படிப்பட்ட வேலை ஒன்றைத் தான் இன்று நான் பக்கம் 02

# நாளை மாலை 6.07 மணிக்கு வீடுகளில் ஈகைச்சுடர் ஏற்றுக!



## தமிழ்த் தேசியக் கட்சிகள் அழைப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவம்பர் 26

தமிழினத்தின் விடுதலைக்காகக் களமாடி மடிந்த வீரமறவர்களை நினைவுகூர்ந்து மாவீரர் நாளான நாளை (27ஆம் திகதி) வெள்ளிக்கிழமை தமிழர் தாயகத்தில் வீடுகளில் ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த அழைப்பை விடுத்துள்ளன. பக்கம் 02

## வாக்குறுதிகளை மீறினால் விளைவுகள் விபரீதமாகும்




### நாடாளுமன்றில் ராஜபக்ஷ அரசுக்கு சுமந்திரன் எம்.பி. கடும் எச்சரிக்கை

இலங்கை அரசு சர்வதேச சமூகத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் அதற்கான பாரிய பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் சபையில் நேற்று பக்கம் 11

## தமிழர்களின் அஞ்சலி உரிமையை அரசு ஒருபோதும் தடுக்க முடியாது!

### தமிழ்த் தேசியக் கட்சிகள் சுட்டிக்காட்டு



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

எத்தனை தடைக்கட்டளையை அரசு விதித்தாலும் தமிழ் மக்களின் அஞ்சலி உரிமையைத் தடுக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாகத் தெரிவித்தன.

மாவீரர் நினைவேந்தல் தொடர்பாகக் கலந்துரையாடு பக்கம் 02

## சர்வதேசத் தலையீடுகளுக்கு எம்மால் இடமளிக்க முடியாது

### அமைச்சர் பீரிஸ் திட்டவட்டம்

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையீடுவதை தமது அரசு விரும்பவில்லை என்று கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாட்டின் உரிமைகள் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் தங்களுக்கே இருக்கின்றது என்பதனாலேயே, ஐ.நா. தீர்மானத்திலிருந்து வெளியேற முடிவு செய்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் வெளிவிவகார அமைச்சுக்கான பக்கம் 11


## கொரோனாவினால் உயிரிழந்த பலருக்கு தொற்று ஏற்பட்டிருந்தமையே தெரியாது!

### அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் தகவல்

கொழும்பு, நவ.26

கொரோனா வைரஸ் தொற்றினால் மரணிக்கும் பெரும்பாலானோருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என்பதை மரணிக்கும் வரையில் அறிந்திருக்கவிலலை என்று அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

இதனால் கொரோனா நோய் அறிகுறிகள் காணப்படும் ஆரம்பத்திலேயே வைத்தியசாலைக்கு சென்று அது தொடர்பிலான சந்தேகத்தை அறிந்து கொள்வது மிகவும் பொருத்தமானது என்றும் அவர் கூறினார். பக்கம் 11



## ஷானி அபேசேகரவுக்கு கொரோனாத் தொற்று



குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பக்கம் 02

## கிளிநொச்சியில் மேலும் 5 பேருக்குக் கொரோனா

### 600 பேர் தனிமைப்படுத்தல்

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மேலும் ஐவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் எரிபொருள் விற்பனை நிலையத்தில் பணியாற்றிய வயோதிபர் ஒருவருக்கு கடந்த திங்கட்கிழமை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட பக்கம் 02

## கொரோனா 21,000 + நேற்று மட்டும் 502 பேர்

இலங்கையில் நேற்றும் 502 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரை 17 ஆயிரத்து 934 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. பக்கம் 02

## உதைபந்தாட்ட நட்சத்திரம் மரடோனா திடீரென மரணம்



ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த உலகின் மிகச்சிறந்த உதைபந்தாட்ட ஜாம்பவான்களில் ஒருவரான டியாகோ மரடோனா தனது 60 வயதில் நேற்று காலமானார்.

ஆர்ஜென்டினா தலைநகர் ப்யூனோஸ் அயர்ஸ் பகுதியில் உள்ள அவரது வீட்டில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு உயிர் பிரிந்தது. பக்கம் 02

## முல்லையில் நினைவேந்தல் தடை உத்தரவு 30 வரை நீடிப்பு

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு 46 பேருக்கு வழங்கப்பட்ட தடையுத்தரவை எதிர்வரும் 30ஆம் திகதி வரை நீடித்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம், கடந்த 20ஆம் திகதி, மாவீரர் நாள் பக்கம் 11



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செய்யப் போகின்றேன் என்று நினைக்கிறேன்.

என்ன செய்வது, அறிந்தது, தெரிந்ததை வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்ளாவிட்டால் என் தலையே வெடித்து விடும் போல ஓர் உணர்வு. தினசரி இப்பத்தியைத் தவறாமல் எழுதி உங்களுடன் உரையாடி, ஊடாடி வந்து விட்ட பழக்கம் அது. அதனால் கேள்விப்பட்டவற்றை எழுதுகிறேன். சில விடயங்களைப் பூடகமாக எழுதினாலும், அச்சில் வரிகளுக்கு இடையில் வராத வாசகங்களையும் புரிந்து கொள்ளக் கூடிய தரமான வாசகர்கள் நீங்கள். அதனால் அப்படி எழுதுகிறேன்.

அடிக்கடி மீண்டும் இருண்ட யுகம் வருமோ என்று கேள்வி எழுப்புவது என் வழமை. என் சந்தேகம் சரிதான் போலும். இருண்ட யுகத்துக்கான முதல் நடவடிக்கை ஊடகங்கள் மீதான பாய்ச்சல். அதற்கான கரு கட்டி விட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர சகல அரச நிறுவனங்களுக்கும் ஓர் உத்தரவு போட்டிருக்கின்றார். அரச நிறுவனங்களின் எந்த விளம்பரங்களும் இனிமேல் தனியார் ஊடகங்களுக்கு வழங்கப்படக் கூடாது என்பதுதான் அந்த பணிப்பு. நாட்டின் நிதி நிலைமைதான் அதற்குக் காரணம் என்று கூறப்பட்டாலும் ஊடகங்களை அடிபணிய வைப்பதற்கான முதல் நடவடிக்கைதான் இது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

உள்வீட்டு விடயங்களைப் புட்டுப்புட்டு வைத்து விவகாரங்களை அம்பலப்படுத்தி விடுவதால் சமூக ஊடகங்களின் மீது அதி உத்தமருக்குக் கடும் காய்ச்சல். அதனால் சமூக ஊடகங்களை ஒருகை பார்க்கிறேன் என்று அவர் பிரதிஞ்ஞை செய்திருக்கின்றார் என்றும் தகவல். சிங்கப்பூர் பாணியில் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவுகள் பறந்திருக்கின்றனவாம். விரைவில் – வாரங்களில் – பல நெருக்குவாரங்களை சமூக ஊடகங்கள் சந்திப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

கொவிட் – தொற்று எச்சரிக்கையை அடுத்து அலரி மாளிகை 'லொக்டவுண்' என்றொரு செய்தி கடந்த வார இறுதியில் வெளியானது. தகவலை வெளியிட்டவர் இலங்கையின் ஒரு மூத்த ஊடகவியலாளர். அத்துறையில் பழமும் தின்று கொட்டையும் போட்டவர். அவரின் கீழும், அவருடன் சேர்ந்தும், பணியாற்றும் வாய்ப்பு எனக்கு இளம் வயதில் கிடைத்திருந்தது. யுத்த காலத்தில் முக்கிய பல இராணுவச் செய்திகளை அவர் மூலம்தான் அறியக் கூடியதாக இருந்தது.

அலரிமாளிகை 'லொக் டவுண்' செய்தி அதிகாரமட்டத்தில் மறுக்கப்பட்டது. அந்தச் செய்தி பிரசுரமான சமயத்தில் எனக்கும் அது தெரிந்திருந்தது. ஏன் வீண் விபரீதம் என்று நான் தவிர்த்துக் கொண்டேன். ஞாயிறன்று தமது பத்தியில் அந்த மூத்த ஊடகவியலாளர் வெளியிட்ட பல தகவல்களை (மாகாண சபைத் தேர்தலுக்கான ஆயத்தம், அமைச்சரவை மாற்றம் போன்றவை) நானும் அன்று ஞாயிற்றுக்கிழமையோ அல்லது அதற்கு முன்னரோ என் பத்தியில் வாசகர்களுக்குத் தந்திருந்தேன். ஆனாலும் அலரிமாளிகை 'லொக் டவுண்' பற்றிய தகவல்களை மேலோட்டமாக நான் அறிந்திருந்த போதிலும் அதைத் தவிர்த்துக் கொண்டு விட்டேன்.

ஆனாலும் அதில் சில உண்மைகள் இருப்பதாகவே பேச்சுகள் அடிபடுகின்றன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த சில நாள்களாகப் பொது வெளியில் மிஸ்ஸிங். இரண்டு, மூன்று நாள்களுக்குள் இரண்டு தடவைகள் நடந்த நாடாளுமன்றப் பேரவையின் கூட்டத்திலும் அவர் பங்குபற்றவில்லை என ஒரு தகவல் தெரிகின்றது.

எனினும் வெள்ளிக்கிழமை (நாளைக்கு) பின்னர் பொது நிகழ்வுகளில் அவர் பங்குபற்றவார் என அவருக்கு நெருக்கமான வட்டாரம் ஒன்று தெரிவித்தது. இருந்து பார்த்தால் உண்மை தெரியும் தானே...?

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் என்ற முறையில், பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகையில் கடமையாற்ற வந்து செல்கின்றார். ஆனால் அவர் அங்கு தங்கியிருப்பதில்லை. விஜேராம மாவத்தையில் உள்ள இல்லத்திலேயே அவர் தமது குடும்பத்துடன் தங்கியுள்ளார். பல சந்திப்புகள் மற்றும் நிகழ்வுகளை அங்கேயே அவர் முன்னெடுக்கின்றார்.

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகையில் பிரதமரின் மூன்றாவது மகன் றோஹிதவும், மனைவியும், மனைவியின் குடும்பத்தவர்களும், றோஹிதவின் பாட்டி ஒருவரும் வசிக்கின்றனர்.

லொக்டவுண் சிக்கல், தொற்றுப் பிரச்சினை குறித்தெல்லாம் அலரிமாளிகையுடன் தொடர்புபடுத்தித்தான் செய்திகள் அடிபடுகின்றன. விஜேராம மாவத்தை இல்லத்தைத் தொடர்புபடுத்தி அல்ல.

இதற்கிடையில் புதிய அமைச்சரவை மாற்றதுடன் தாம் பொறுபேற்கவுள்ள பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சுகளுக்கான திணைக்கங்கள், அரச நிறுவனங்களை ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ வர்த்தமானி மூலம் அறிவித்திரக்கின்றார்.

தொல்லியல் திணைக்களம் உட்பட பிரதமரின் கீழிருந்த பல நிறுவனங்கள் அவரிடமிருந்து பிடுங்கப்பட்டுள்ளன. பஸில் ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பில் இருந்த பல செயலணிகள் இனிமேல் நேரடியாக ஜனாதிபதியின் கீழ்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வலது கரம் போல செயல்படும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடமிருந்து சதோசா கூட பிடுங்கப்பட்டு ஜனாதிபதியின் வசமுள்ள அமைச்சின் கீழ் செல்லுகின்றது.

இதற்கிடையில் –

புத்தாண்டு பிறந்ததும், எம்.பி. பதவியும் அமைச்சர் பதவியும் ஏற்பார் என் எதிர்பார்க்கப்பட்ட பஸில் ராஜபக்ஷ தமது முடிவை மாற்றிக் கொண்டு அமெரிக்காவில் தமது குடும்பத்தவர்களுடன் மூன்று மாதங்களையாவது செலவிடும் திட்டத்துடன் அமெரிக்க புறப்படவிருக்கின்றார் என்றும் ஒரு செய்தி கசிந்தது.

பிரதமர் ரணிலின் அரசு 2015 இல் பொறுப்பேற்றதும் பிணை முறி ஊழல் விவகாரம் பெரிய விடயமாக அடிப்பட்டது. அது போல, இப்போது கொரோனாத் தடுப்பு ஏற்பாடுகளின் நிதி செலவிடுகை தொடர்பில் பல முறைப்பாடுகள், தகவல்கள் வெளியாகிய வண்ணம் உள்ளன. மீண்டும் ஓர் ஊழல் பூகம்பம் வெடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பார்ப்போம் என்ன நடக்கின்றது என்று...!

– மின்னல் –

## நாளை மாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பில் ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சியினர் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளதாவது:–

தாயக நேரப்படி நாளை மாலை 6.05 மணியளவில் மாவீரர்கள் நினைவாக மணி ஒலி எழுப்பப்படும். 6.06 மணியளவில் ஒரு நிமிட மௌன வணக்கம் செலுத்தப்படும்.

இதையடுத்து, மாலை 6.07 மணியளவில், தாயகத்தில் வீடுகளில் தமிழ் மக்கள் மாவீரர் நினைவாக ஈகைச்சுடர்களை ஏற்றி வணக்கம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் – என்றனர்.

தாயகத்தில், மாவீரர்களுக்கு பொது இடங்களில் மக்கள் ஒன்றுகூடி வணக்கம் செலுத்தும் நிகழ்வுகளுக்கு நீதிமன்றங்களின் ஊடாக பொலிஸாரால் தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே ஒன்றிணைந்த தமிழ் தேசியக் கட்சிகள் நேற்று மாலை கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளன.

## ஷானி அபேசேகரவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து, மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர், அங்கிருந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா 21, 000...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதையடுத்து மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 21 ஆயிரத்து 469 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 15 ஆயிரத்து 447 பேர் குணமடைந்துள்ளனர். 5 ஆயிரத்து 928 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 94 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## உதைபந்தாட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மரடோனாவுக்குக் கடந்த நவம்பர் மாதம் மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு வெற்றிகரமான அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இதனையடுத்து அதிகளவுக்கு போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி இருந்த அவருக்கு அதற்கான சிகிச்சை வழங்கப்பட இருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

1986–ஆம் ஆண்டு ஆர்ஜென்டினா உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியை வென்றபோது மரடோனா அந்த அணியின் கப்டனாக இருந்தார்.

இந்தப் போட்டியில் ஆர்ஜென்டினா அணி இறுதிப் போட்டியில் நுழைவதற்கு இங்கிலாந்துக்கு எதிரான காலிறுதிப் போட்டியில் மரடோனா அடித்த கோல் காரணமாக இருந்தது. புகழ்பெற்ற அந்தக் கோல் பலராலும் இன்றும் பேசப்படுகிறது.

இதேவேளை, மரடோனாவின் மரணத்துக்கு இரங்கல் தெரிவித்து ஆர்ஜென்டினா கால்பந்து சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. எங்கள் வழிகாட்டியான நீங்கள் எப்போதும் எங்கள் இதயங்களில் இருப்பீர்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரடோனா ஆர்ஜென்டினா அணிக்காக மட்டுமன்றி கிளப் போட்டிகளில் பார்சிலோனா மற்றும் நபோலி அணிகளுக்காகவும் விளையாடி பல சம்பியன் பட்டங்களை வென்றுள்ளார்.

அர்ஜென்டினாவுக்காக 91 போட்டிகளில் விளையாடிய மரடோனா 34 கோல்களை அடித்தார்.

அத்துடன் நான்கு உலகக் கோப்பைப் போட்டிகளில் பங்கேற்றும் ஆர்ஜென்டினா அணிக்குத் தலைமை தாங்கியும் அவர் தனது சிறப்பான ஆட்டங்களை வெளிப்படுத்தினார்.

1990 இல் இத்தாலியில் நடந்த இறுதிப் போட்டிக்கு ஆர்ஜென்டினா அணியை அழைத்துச் சென்றதில் மரடோனாவின் பங்கு அளப்பரியது. எனினும் இந்த இறுதிப் போட்டியில் மேற்கு ஜெர்மனியிடம் ஆர்ஜென்டினா தோல்வியடைந்தது.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நிலையில் எரிபொருள் நிலையத்தில் பணியாற்றுபவர்கள், கொரோனாத் தொற்று உறுதி செய்த வயோதிபரின் உறவுகளுடன் அயலில் உள்ள சில வர்த்தக நிலையங்களின் ஊழியர்கள் என 29 பேருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் தொற்றுக்குள்ளான வயோதிபரின் மருமகன், எரிபொருள் விற்பனை நிலையத்தில் பணியாற்றிய 18 வயது இளைஞர் மற்றும் அவருடைய கடைக்கு அருகாமையில் தண்ணீர் விற்பனைக் கடையில் பணியாற்றும் மூவர் என 5 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தண்ணீர் விற்பனைக் கடையில் பணியாற்றும் மூவரும் தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

இதையடுத்து அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்த 600 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## தமிழர்களின் அஞ்சலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வதற்காக 8 தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானத்தின் யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்தில் ஒன்றுகூடியிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சி.வி.கே. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.

குறித்த கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சின் தலைவர் மாவை சேனாதிராஜா, ஈழமக்கள் புரச்சிகர விடுதலை முன்னணி யின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறிக்காந்தா, செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வர் து.ஈசன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் சி.வி.கே.சிவஞானம் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பல ஆண்டுகளாக தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக தம் இன்னுயிர்களை அர்ப்பணித்த எம் மாவீரர்களை நினைவுகூர்ந்து கார்த்திகை மாதத்தின் 27ஆம் நாளில் மாவீரர் துயிலும் இல்லங்களிலும், பொது இடங்களிலும், எம் இல்லங்களிலும் அஞ்சலித்து வந்துள்ளோம்.

இந்த நினைவஞ்சலி நிகழ்வுகளுக்குத் தடை விதிக்குமாறு கோரி வடக்கும், கிழக்கு மாகாணங்களில் உள்ள பல்வேறு நீதிமன்றங்களில் பொலிஸார் வழக்குகளைத் தாக்கல் செய்து தடை உத்தரவுகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்தநிலையில் மாவீரர் நினைவஞ்சலி நிகழ்வுகளை முன்னெடுப்பது தொடர்பாக உரிய வழிகாட்டல்களை எமது மக்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பும் கடமையும் எம்மைச் சார்ந்திருக்கிறது.

அதேவேளை, தென்னிலங்கையில் பாரிய அளவில் பரவியிருக்கும் கொரோனா வைரஸ் தொற்று நோயின் தாக்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் தனது தீவிரத்தை காட்டத் தொடங்கியுள்ளது.

உலகளாவிய உயிர்க்கொல்லி நோயாக தீவிரமடைந்து நிற்கும் கொரோனாத் தொற்றைப் பொறுத்தமட்டில் எமது மக்களின் பாதுகாப்பு தொடர்பில் எம் அனைவருக்கும் உள்ள சமூகப் பொறுப்பை நாம் உணர்ந்திருக்கின்றோம்.

மாவீரர் நினைவேந்தல் என்பது எம் அனைவரினதும் உணர்வுகளோடு இணைந்திருக்கும் ஒரு முக்கியமான நிகழ்வு என்ற அடிப்படையில் அஞ்சலி செலுத்த வேண்டிய எமது தார்மீகக் கடமையை எந்தச் சூழ்நிலையிலும் நாம் நிறைவேற்றியே ஆக வேண்டும்.

கடந்த சில வருடங்களாக அனுமதிக்கப்பட்டு வந்த இந்த நிகழ்வு தொடர்பில் புதிய அரசின் அணுகுமுறை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படமுடியாததாக அமைந்திருக்கிறது.

சட்ட ஏற்பாடுகளைச் துஷ்பிரயோகம் செய்து எத்தனை தடைக் கட்டளைகளை அரசு பெற்றுக் கொண்டாலும், மரணித்த உறவுகளுக்கு நாம் அஞ்சலி செலுத்துவதற்கு எமக்குள்ள அடிப்படை உரிமையை அரசு மறுத்து நிற்க முடியாது. அந்த உரிமையை எமது மக்கள் நிலைநாட்டியே தீருவார்கள்.

இந்தச் சூழ்நிலையில் மாவீரர் நினைவஞ்சலியை தமிழர் தாயகமெங்கும் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமது இல்லங்களில் இருந்தவாறே முன்னெடுக்குமாறு நாம் எமது மக்களை வேண்டுகின்றோம்.

வழக்கம் போல மாலை 6.07 மணிக்கு தம் இல்லங்களில் சுடர் ஏற்றி எம் மாவீரர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துமாறு எமது மக்களை நாம் மேலும் வேண்டுகின்றோம்.

எமது தேசத்தின் விடுதலைக்கான நீண்ட பயணத்தில் நாம் எதிர்கொள்ளும் தடைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து இலட்சியம் என்னும் இலக்கை நோக்கி நாம் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கும் மாவீரர்களின் கனவுகள் நனவாவதற்கும் அவர்களின் நினைவுகள் நிச்சயம் எமக்கு வலுவூட்டும்– என்றார்.

# ஐ.நா. தீர்மானத்தை வலுப்படுத்த முழு ஒத்துழைப்பு வழங்கும் சுவிஸ்

## சுமந்திரன் எம்.பிடம் அந்நாட்டுப் புதிய தூதுவர் உறுதி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், இலங்கைக்கான சுவிட்சர்லாந்து புதிய தூதுவர் டொமினிக் ஃபர்க்லரை நேற்று கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தூதுவருடன் ஐ.நா. தீர்மானம், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் இலங்கையின் சமகால நிலைமைகள் குறித்து விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டார் என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்தை வலுப்படுத்த சுவிட்சர்லாந்து முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று இதன்போது தூதுவர் வாக்குறுதியளித்தார் என்றும் சுமந்திரன் எம்.பி. மேலும் கூறினார்.

# அரசியல் பழிவாங்கலால் 5 வருடம் சிறையில் இருந்தார் பிள்ளையான்!

## டிலான் பெரேரா தெரிவிப்பு



அரசியல் பழிவாங்கலைக் கருத்திற் கொண்டே நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் 5 வருடம் சிறையில் அடைக்கப்பட்டார். நீதிமன்ற செயற்பாடுகளில் அரசு தலையிடவில்லை. நீதித்துறை தற்போது சுயாதீனமாகச் செயற்படுகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நல்லாட்சி அரசாங்கம் அரசியல் பழிவாங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியது. நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துறை சந்திரகாந்தன் என அழைக்கப்படும் பிள்ளையான் நல்லாட்சி அரசாங்கத்துக்கு எதிராகவும், அப்போதைய எதிர்க்கட்சிக்கு சார்பாக செயற்பட்ட காரணத்தாலும் 5 வருட காலம் சிறையில் அடைக்கப்பட்டார். கொவிட் – 19 வைரஸ் தாக்கத்துடன் அரசாங்கம் இவரை விடுதலை செய்துள்ளது. என எதிர்க் கட்சியினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். இவரது விடுதலைக்கும் அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

நீதிமன்ற செயற்பாடுகளில் கடந்த அரசாங்கம் தலையிட்டமை பகிரங்கப்படுத்தப்பட்டது. தற்போதைய அரசாங்கம் நீதித்துறையில் தலையிடவில்லை. நீதிமன்றம் சுயாதீனமாகவே செயற்படுகிறது. கொவிட் – 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் அரசாங்கம் பல தீர்மானங்களை பல நெருக்கடிகளுக்கு மத்தியில் எடுத்துள்ளது. அனைத்து சவால்களையும் வெகுவிரைவில் வெற்றிக் கொள்ள முடியும். – என்றார்.

# புத்தளத்தில் மஞ்சலுடன் இருவர் கைதாகினார்கள்!

புத்தளம், பாலாவி பகுதியில் மஞ்சளை கடத்துவதற்கு தயாராகிக்கொண்டிருந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய இந்த இருவரும் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினருடன் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து புத்தளம் அனுராதபுர வீதியில் அமைந்திருக்கும் அரிசி ஆலையொன்றில் மேற்கொண்ட தேடுதலில், கெப் ரக வாகனத்தில் கொண்டு செல்ல தயாராகவிருந்த 8 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 231 கிலோ உலர்ந்த மஞ்சள் மீட்கப்பட்டது.

இவ்வாறுமீட்கப்பட்ட உலர்ந்த மஞ்சள் கற்பிட்டி பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்ததாக பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்ட இருவரும் புத்தளம், மற் றும் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட மஞ்சளுடன் இரு சந்தேக நபர்களும் மேலதிக நடவடிக்கைகளுக்காக புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீன்பிடித் தொழில் திருமலையில் பாதிப்பு!

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக திருகோணமலையில் மழை காற்றின் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் திருகோணமலையின் கரையோரப் பகுதியில் உள்ள மீனவர்கள் மீன்பிடித் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாள்களாக இந்த நிலை நீடிப்பதால் மீன்பிடி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்லாது வீடுகளுக்குள் முடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீனவருக்கு நட்டஈடு வழங்கக் கோரிக்கை

நிவர் புயலால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே என்.சுப்பிரமணியம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

நிவர் புயல் பெரும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ள காரணத்தால் மீனவ மக்கள் கடலுக்குச் செல்லாது தங்கள் தொழில்களை விட்டு வீடுகளில் முடங்கியுள்ளார்கள். இதனால் பட்டினியை எதிர்நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையிலே இவர்களுடைய பசியை நாங்கள் உடனடியாக போக்க வேண்டிய சூழலில் இருக்கின்றோம்.

இதற்கு உரிய தரப்பினர் குறிப்பாக மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் முக்கியமாக கடற்தொழில் அமைச்சு இந்த விடயத்தைக் கருத்தில் எடுத்து இதற்கு உரிய நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும். –எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# முல்லைத்தீவில் மீளவும் இயங்கும் தனிமைப்படுத்தல் நிலையங்கள்!

## இதுவரை 6 பேருக்குக் கொரோனா உறுதி

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் நிலையங்களில் மீண்டும் கொரோனாத் தொற்று எனச் சந்தேகிக்கப்படுகின் றவர்கள் கொண்டுவரப்பட்டு தனிமைப்படுத்தல் செயல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

ஏற்கனவே கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து வந்த நிலையில் முல் லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்பிலவு விமானப்படைத்தளம், கேப்பாப்பிலவு 59ஆவது படைப்பிரிவின் இராணுவப் பயிற்சி பாடசாலை, புதுக்குடியிருப்பு திம்பிலி 68 ஆவது படைப்பிரிவின் இராணுவப் பயிற்சி பாடசாலை ஆகிய 3 தனிமைப்படுத்தல் நிலையங்கள் இயங்கி வந்த நிலையில் அவை, வீடுகளிலேயே தனிமைப்படுத்தல் செயற்திட்டங்கள் இடம்பெறும் என்ற இராணுவத் தளபதியின் அறிவிப்பைத் தொடர்ந்து மூடப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து விமானப்படையுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துகின்ற நோக்கத்தோடு கடந்த 21ஆம், 22ஆம் திகதிகளில் கேப்பாப்பிலவில் விமானப்படைத் தளத்தில் விமானப் படையுடன் தொடர்புடையவர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் 145 பேர் கொண்டுவந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஒரு தொகுதியினருக்கு நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அடிப்படையில் இருவருக்குத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தநிலையில் அவர்கள் கொரோனா சிகிச்சை வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்

இன்னும் ஒரு தொகுதியினருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த நபர்களில் நான்கு பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இருப்பது அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர்கள் மருதங்கேணி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் மூடப்பட்டிருந்த மற்றுமொரு தனிமைப்படுத்தல் நிலையமான 59ஆவது படைப்பிரிவின் இராணுவப் பயிற்சி பாடசாலைக்கு டுபாயிலிருந்து நாடு திரும்பிய 17 பேர் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கொண்டுவரப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மூடப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டு வருகிறதோடு இதுவரை தனிமைப்படுத்த நிலையங்களிலேயே தனிமைப்படுத்தப்பட்ட 6 பேருக்குத் தொற்று அடையாளம் காணப்பட்டு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# உணவகத்தில் சடலமாக மீட்கப்பட்டவர் மரணத்துக்கான காரணம் மாரடைப்பாம்!

யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள உணவகத்தில் சடலமாக மீட்கப்பட்ட பணியாளர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சட்ட மருத்துவ அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

திருமுருகண்டியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 48 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

யாழ்ப்பாணம் நகரில் கே.கே.எஸ். வீதியில் இயங்கும் பிரபல சைவ உணவகம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு உறக்கத்துக்குச் சென்ற நிலையில் நேற்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவரது உயிரிழப்புக்கு மாரடைப்புக் காரணம் என்று சட்ட மருத்துவ அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இந்த இறப்புத் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்.

இந்நிலையில், சடலம் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, 3 நாள்களுக்கு முன் அவர உணவகத்திற்கு பணிக்காக வந்துள்ள நிலையில் அவருக்கு கொரோனா தொற்று இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.

எனினும் தற்போது இறப்புக்கான காரணம் மாரடைப்பு என உறுதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## தவிர்க்க முடியாத கடப்பாடு

பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகமே இருண்டு போய் விட்டது என்று நினைக்குமாம் என்று கூறுவர். அதுபோலவே, தீக்கோழி மணலினுள் தலையைப் புதைத்து விட்டால் தான் முற்றாக ஒளித்துக் கொண்டு விட்டதாகக் கருதுமாம்.

இவை எல்லாம் பேச்சு வழிச் சொல்லாடல்கள்.

இலங்கை அரசு – குறிப்பாக வெளிவிவகார அமைச்சு – இப்போது சர்வதேச விவகாரங்களை ஒட்டித் தெரிவிக்கும் கருத்துக்கள் இந்தச் சொல்லாடல்களைத்தான் நினைவுபடுத்துகின்றன.

*“இலங்கைக்கு எதிரான ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்தில் இருந்து – அதன் இணை அனுசரணையிலிருந்து – இலங்கை தற்போது விலகி விட்டது. எனவே சர்வதேச ரீதியாக எந்தவொரு பிரச்சினையும் நாட்டுக்கு ஏற்படாது.”* – என்று நேற்று நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறியிருக்கின்றார்.

வரவு – செலவுத் திட்டத்தில் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

தாங்கள் ஒரு தலைபட்சமாகத் தீர்மானத்தின் இணை அனுசரணையிலிருந்து வெளியேறிவிட்டோம் என அறிவித்துவிட்டமையால் உலக நாடுகள் ஒன்று சேர்ந்து ஏகமனதாக இலங்கை தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானமும், அதை நடைமுறைப்படுத்துவதற்காகத் தாங்களும் சேர்ந்து வழங்கிய சர்வதேச கடப்பாடும் செயலிழந்து போய்விடும் என்ற பாணியில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் உரைப்பதனை நோக்கும் போது, கண்ணை மூடிக் கொண்டு பூனை நினைக்கின்ற விடயமும், முகத்தை மணலுக்குள் புதைத்துக் கொண்டு தீக்கோழி எண்ணும் விவகாரமும்தான் நினைவுக்கு வருகின்றன.

அது மாத்திரமல்ல, இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் 2015 இல் நிறைவேற்றப்பட்ட 30 / 01 இலக்கத் தீர்மானத்துக்கு இலங்கை அனுசரணைப் பணி வகித்தது என்று கூறப்பட்டாலும், அதில் அடங்கியிருந்த விடயங்கள் – வாசகங்கள் – நாட்டில் வேறு யாருக்கும் தெரியாது என்றும், நாட்டின் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறசேன கூட இந்தத் தீர்மான வாசகங்களை அறிந்திருக்கவில்லை என்றும், நேற்று நாடாளுமன்றத்தில் கதை அளந்திருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

அமைச்சரின் இந்தக் கூற்று வெறும் பெய்யுரையே என்பதை நேற்றே நாடாளுமன்றத்தில் போட்டுடைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த மூன்றின் போதும் மைத்திரிபால சிறிசேனவே நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார். இந்த மூன்று தீர்மானங்களும் ஏனைய முக்கிய நாடுகளுடன் இலங்கையும் சேர்ந்தே அனுசரணைப் பணி வகித்து, கொண்டு வந்து நிறைவேற்றியவையே.

இந்த மூன்று தீர்மானங்களுமே ஏறத்தாழ ஒரே வாசகங்களை – வசனங்களை – கொண்டிருந்தமையுடன் இலங்கைக்கு ஒரே விதக் கடப்பாட்டை உணர்த்துவனவாகவும் அமைந்தன.

முதலாவது தீர்மானம் 30/01 இலக்கத்தைக் கொண்டது. அது 2015 ஒக்ரோபர் முதலாம் திகதி நிறைவேறப்பட்டது.

அடுத்தது 34/ 01 இலக்கத்தில் தீர்மானம். அது 2017 மார்ச் 17ஆம் திகதி கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்டது.

மூன்றாவது 40 /01 இலக்கம் கொண்டது. இது 2019 மார்ச்சில் நிறைவேற்றப்பட்டது.

ஏறத்தாழ மூன்றரை வருடங்கள் வித்தியாசத்தில் வெவ்வேறு காலகட்டங்களில் ஒரே வாசகங்களுடனான தீர்மானம் – இலங்கை தொடர்பில் – அதுவும் இலங்கையின் அனுசரணையுடன் பிரேரிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டிருக்கும் போது, அதன் வாசகங்கள், விவரங்கள் நாட்டின் ஜனாதிபதிக்கும், ஏனையோருக்கும் தெரியாமல் முன்னெடுக்கப்பட்டன என்று கூறுவது சுத்தப்பொய் என்பதை நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டி அம்பலப்படுத்தினார் சுமந்திரன்.

சரி, முதலாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது தெரியாமல் இருந்திருந்தால் ஒன்றரை ஆண்டுகள் கழித்து மீளவும் அது தீர்மானமாக நிறைவேற்றப்படும் போதாவது அதில் சம்பந்தப்பட்டாமல் இருந்திருக்கலாம் அல்லவா? அதற்கும் இணை அனுசரணை வழங்கி, திரும்பவும் இரண்டு ஆண்டுகள் கழித்து அதே வேலையை மீளவும் செய்து விட்டு, இப்போது யாருக்கும் தெரியாமல் நடந்த விவகாரம் என்பது யாரின் காதில் பூச்சுற்றும் முயற்சி?

இவை, சர்வதேச சமூகத்துக்கு தனித் தலைவர்களோ, அவர்களின் அரசாங்கங்களோ வழங்கிய உறுதி மொழிகள் அல்ல. இணை அனுசரணைப் பணி வகித்து இணங்கியமை மூலம் அத்தீர்மானத்துக்கும் அதில் அடங்கிய விடயங்களுக்கும் இலங்கை நாடு – இலங்கை அரசு (State) – வழங்கிய உறுதிமொழி.

இந்த உறுதிமொழி மூலம் தான் வழங்கிய கடப்பாட்டிலிருந்து இலங்கை இலகுவில் தப்பித்துக் கொள்ளவோ, விலகிக் கொள்ளவோ முடியாது.

அப்படி விலகிக் கொள்ள முயல்வது விபரீதமான விளைவுகளைத் தரும் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

இலங்கையின் நிலைமை எத்தகையதாக இருக்கப்போகின்றது என்பது வருகின்ற மார்ச்சில் – இன்னும் நான்கு மாதங்களில் – தெளிவாக வெளிப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

# யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றதே அரசின் நிதி ஒதுக்கீடு!

## சபையில் கஜேந்திரன் சாடல்



யுத்தத்தால் அழிந்துபோன பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு தேவையான எந்த வித நிதி ஒதுக்கீடுகளையும் அரசாங்கம் செய்யவில்லை. “யானைப்பசிக்கு சோளப் பொரி” போல் சிறிதளவு நிதியை ஒதுக்குவதால் எதனையும் கட்டியெழுப்ப முடியாது. எனத் தமிழத்; தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சபையில் குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில் –

யுத்தத்தால் அழிந்துபோன பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்குத் தேவையான எந்தவித நிதி ஒதுக்கீடுகளையும் அரசாங்கம் செய்யவில்லை. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் பெருமளவான அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. வடக்கில் மட்டும் 60 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன.

இந்தக் குடும்பங்கள், மாணவர்களின் வாழ்வாதாரங்களை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களும் கிடையாது. வடக்கில் “சி அன்ட் டி” தர வீதிகள் 840 கிலோ மீற்றர் நீளமானவை திருத்தப்பட வேண்டியுள்ளது. அதேபோன்று 8 ஆயிரத்து 567 கிலோ மீற்றர் நீளமான கிராமிய வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன.

அத்துடன் பல கைத்தொழிற்சாலைகளை புனரமைக்க வேண்டியுள்ளது. ஆனால் எதற்கும் நிதி ஒதுக்கப்படவில்லை. “யானைப் பசிக்கு சோளப்பொரி” போல் சிறிதளவு நிதியை ஒதுக்குவதால் எதனையும் கட்டியெழுப்ப முடியாது.– என்றார்.

# தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகள் தேவையேற்படின் முடக்கப்படும்!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தொற்றாளர்கள் இனங்காணப்படுவார்களானால், அவர்களால் பெருமளவானோருக்கு எச்சரிக்கை ஏற்படுமாயின் அந்தப் பிரதேசங்களை மீண்டும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, மேல் மாகாணத்திலிருந்து மத்திய மலைநாட்டுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு விடுத்த அறிவித்தலை மீறி சிலர் அந்தப் பகுதிகளுக்குச் சென்றமையாலேயே மத்திய மாகாணத்தில் வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொழும்பிலிருந்து மத்திய மலைநாட்டை அண்மித்த பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தோம். எனினும் அந்த அறிவித்தலை மீறிச் சென்ற நபர் ஒருவரால் மஸ்கெலியாவில் தொற்று பரவல் ஏற்பட்டது.

இதே போன்று கொட்டாஞ்சேனையிலிருந்து சென்ற நபரொருவராலேயே நுவரெலியாவிலும் தொற்று இனங்காணப்பட்டது. தொற்றாளர் ஒருவர் சென்றமையாலேயே இந்த இரு பிரதேசங்களிலும் வைரஸ் பரவல் இனங்காணப்பட்டுள்ளதாக புலனாய்வுத் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தொற்றாளர்கள் இனங்காணப்படமாட்டார்கள் என்று கூற முடியாது. அவ்வாறு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டால் அவர்களின் தொடர்புகள் தொடர்பாக ஆராய்ந்த பின்னர், பெருமளவானவர்களுக்கு பாதிப்பு ஏற்படுமென கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கமைய தேவையேற்படின் மீண்டும் தனிமைப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். எச்சரிக்கை இல்லை என்றால் தனிமைப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட மாட்டாது.

இதே வேளை மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான வேலைத்திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகிறது. மத்திய கிழக்கிலிலிருந்து மாத்திரமின்றி ஏனைய நாடுகளிலிருந்தும் இலங்கையர்கள் அடுத்த வாரம் முதல் அழைத்து வரப்படுவார்கள்.– என்றார்.


16 2020
பால்நிலை வன்முறைக்கு எதிரான
16 நாள் செயற்பாடு - 2020
16 Days of Activism Against Gender Based Violence
JSAC
ஒவ்வொருவருக்கும் இக்கணம் ஏற்படும்
உணர்வே போதும் உங்களை மாற்ற...
ஒன்றிணைவோம்! பெண்களிற்கெதிரான
வன்முறையை குறைப்போம்!
யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center



வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
‘ஒவ்வொருமரம் நடப்படும் போதும் சமாதானத்துக்கான விதை ஊன்றப்படுகிறது.’
– வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)

# பிரதமருக்காகவே தயாரிக்கப்பட்டது அரசின் வரவு – செலவுத் திட்டம்!

## சாடுகின்றார் நளின் பண்டார



அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டம், பிரதமர் மற்றும் அவருக்கு நெருக்கமானவர்களைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றே தோன்றுகிறது.

புத்திஜீவிகளும் வினைத்திறனுடன் செயற்படக்கூடியவர்களும் இந்த அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது என்பதே மக்களின் பொதுவான அபிப்பிராயம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக்காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் வெகுவாக அதிகரித்துவரும் நிலையில், கொழும்புவாழ் மக்கள் மிகுந்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களைப் போன்று உணவைப் பெற்றுக்கொள்வதற்கு மாற்று வழிகளைத் தேடிக்கொள்வதற்கான வாய்ப்பு கொழும்பு நகரத்தில் வாழும் மக்களுக்கு இல்லை. அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா பணம் ஒரு வாரத்தில் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ குறைகூறுகின்றார்.

உண்மையில் அந்தப் பணத்தைப் பயன்படுத்தி குடும்பமொன்று ஒருமாதம் வரையில் அதன் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாது.

அடுத்ததாக இந்த வாரம் பாடசாலைகள் மீளத்திறக்கப்பட்டன. எனினும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களே பாடசாலைகளுக்கு சமுகமளித்திருந்தனர்.

பாடசாலைகளைத் திறப்பதால் மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் கூறும் அதேவேளை, பாடசாலைகள் திறக்கப்படுகின்றன. முதலில் அனைத்துப் பாடசாலைகளுக்கும் குறைந்தபட்ச சுகாதாரப்பாதுகாப்பு வசதிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பி.சி.ஆர். பரிசோதனையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

இலங்கையில் நாளொன்றுக்கு மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற குழுநிலை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

தற்போது பொது வைத்தியசாலைகளில் 34 பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரங்களும் 1200 வென்டிலேட்டர் இயந்திரங்களும் 7004 ஐ.சி.யு. படுக்கைகளும் காணப்படுகின்றன.

கொரோனா தொற்று இலங்கையில் பரவ ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, 25 பி.சி.ஆர். இயந்திரங்களும் 220 நடமாடும் வென்டிலேட்டர் இயந்திரங்களும் 61 ஐ.சி.யு. படுக்கைகளையும் மேலதிகமாக பொது வைத்தியசாலைகளில் இணைத்துள்ளோம்.

பி.சி.ஆர். பரிசோதனைக்காக 25 மத்திய நிலையங்கள் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இதனை எதிர்காலத்தில் அதிகரிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்காக உலக வங்கியிடமிருந்து நிதி பெற்று, பி.சி.ஆர். இயந்திரங்களைக் கொள்வனவு செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

11 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் தற்போது ஒரு நாளைக்கு பொது வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

மார்ச் மாதம்வரை ஒருநாளைக்கு 300 பி.சி.ஆர். பரிசோதனைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், தற்போது ஒரு நாளைக்கு 11 ஆயிரம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நடவடிக்கையை மேலும் துரிதப்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் போதிய தெளிவுடன் காணப்படுகிறது. இதற்காக ரொபோ கைகள் கொண்ட 16 இயந்திரங்களும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே நாம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறோம்.

2020 ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 3 ஆம் திகதிவரை இலங்கையில் எந்தவொரு கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்படவில்லை.

இந்தக் காலப்பகுதியில் பி.சி.ஆர். பரிசோதனைகளும் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுதான் வந்தன. எனினும் மினுவங்கொடை ஆடைத்தொழிற்சாலை ஊடாகத் தற்போது தொற்று ஏற்பட்டுள்ளது.

இங்கு அடையாளம் காணப்பட்ட முதலாவது தொற்றாளருக்கு எவ்வாறு வைரஸ் பரவியது என்பது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபருக்கு சட்டமா அதிபரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தற்போது குற்றத்தடுப்புப் பிரிவினால் விசாரணைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.– என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாண கலாசார மண்டபத்துக்கு மாநகர சபை உறுப்பினர்கள் விஜயம்





இந்திய அரசாங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு வரும் யாழ்ப்பாண கலாசார மண்டபத்துக்கு யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் நேற்று புதன்கிழமை விஜயமொன்றினை மேற்கொண்டனர்.

யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட் தலைமையில் சென்ற உறுப்பினர்களோடு, யாழ். மாநகர சபையின் ஆணையாளர், செயலாளர், பிரதம கணக்காளர் மற்றும் பிரதம பொறியியலாளர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தின் போது, கலாசார மண்டபத்தின் அதிகாரிகள் அங்கு அமைந்துள்ள கட்டடங்கள், அரங்குகள் பற்றி விளக்கமளித்தமையோடு, அங்குள்ள சகல பகுதிகளையும் பற்றியும் உறுப்பினர்களுக்கு விளக்கமளித்தனர்.

கலாசார மண்டபத் தொகுதியினுள் அமைந்துள்ள மூன்று கட்டடத் தொகுதிகள் மற்றும் 11 மாடிகளைக் கொண்ட பயிலரங்கு, தளங்களையும் உறுப்பினர்கள் பார்வையிட்டனர்.

# 3 கிலோமீற்றர் வரை நடந்து சென்ற கொரோனா நோயாளி

நுவரெலியா, டயகம – நட்பொன் தோட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர் ஒருவர் சுமார் 3 கிலோ மீற்றர் வரை நடந்து சென்று அம்புலன்ஸில் ஏறியுள்ளார்.

கொழும்பு மெனிங் சந்தையில் தொழில்புரிந்த 72 வயதுடைய அந்த நபர் கடந்த 22 ஆம் திகதி நெட்பொன் தோட்டத்துக்கு சென்றுள்ளார்.

கொழும்பில் இருந்து நுவரெலியா மாவட்டத்துக்குச் செல்பவர்கள் கினிகத்தேனை, கலுகல்ல பகுதியில் உள்ள சோதனைச் சாவடிக்கு அருகில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கடந்த சனிக்கிழமை முதல் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் அந்த நபரிடமும் பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன. பரிசோதனை முடிவில் அவருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி நபரை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் சென்றுள்ளது.

எனினும் அந்தத் தோட்டத்தின் வீதி குன்றும் குழியுமாக இருந்ததால் அம்புலன்ஸ் அந்த இடத்துக்குச் செல்லவில்லை.

இதனால் கொரோனா தொற்றாளர் சுமார் 3 கிலோ மீற்றர் வரை நடந்து வந்தே அம்புலன்ஸில் ஏறியுள்ளார். அதன்பின்னர் அவர் அம்பாந்தோட்டையிலுள்ள கொரோனா தடுப்பு சிகிச்சை நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

# கொழும்பில் 2 ஆம் அலையின் பின் 12,248 குடும்பங்கள் தனிமையில்!

கொழும்பு, நவ.26

கொரோனா வைரஸ் தொற்று இரண்டாம் அலை ஏற்பட்டதன் பின்னர் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 12 ஆயிரத்து 248 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு 200 கோடி ரூபாவுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் பிரதீப் யசரன்ன தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்திலிருந்து இணையவழியூடாக நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

கொழும்பு மாநகசபையை அண்மித்த பகுதிகளிலேயே தற்போது கொவிட் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. மார்ச் மாதம் இலங்கையில் முதலாவது தொற்றாளர் இனங்காணப்பட்டமையிலிருந்து 67 நாள்கள் கொழும்பு முழுமையாக முடக்கப்பட்டிருந்தது.

தற்போது ஒக்ரோபர் மாதம் இரண்டாவது அலை ஏற்பட்டதன் பின்னர் 12 ஆயிரத்து 248 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் 10 ஆயிரம் ரூபா பெறுமதி நிவாரம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் இதுவரையில் 13 பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் திம்பிரிகஸ்ஸாய பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 3 தொடர்மாடி குடியிருப்புக்களும் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 5 தொடர் மாடி குடியிருப்புக்களும் உள்ளடங்குகின்றன.

அத்தோடு மொரட்டுவை பிரதேச செயலகத் திற்குட்பட்ட தொடர்மாடி குடியிருப்பொன்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த தொடர் மாடி குடியிருப்புக்களில் 8 ஆயிரத்து 486 குடும்பங்கள் வாழ்கின்றன. இவற்றை மேலும் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. – என்றார்.

# கொரோனா குணமடைவு 15 ஆயிரத்தைக் கடந்தது!

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை 15 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 485 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 447 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்து 967 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 426 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் அதேவேளை 601 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 94 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக சுவீகரித்த நிலங்களுக்கு நட்டஈடு வழங்கவேண்டும்!




## சமல் ரபஜபக்ஷ திட்டவட்டம்

நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நிலங்கள் சுவீகரிக்கப்படும்போது அவற்றுக்கான நஷ்டஈடு திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் வழங்கப்பட வேண்டும் என நீர்ப்பாசன அமைச்சரும் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டு விவ காரம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நீர்ப்பாசனம் தொடர்பான அமைச்சரவை ஆலோசனைக் குழுவில் தெரிவித்தார்.

நிலங்களை இழக்கும் பொது மக்களின் திருப்தி தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட அமைச்சர், நீதி கிடைக்கக்கூடிய வகையில் மக்களுக்குத் தொடர்ந்து இழப்பீடு வழங்குவதன் மூலம் இந்தத் திட்டத்துக்கு அவர்களின் ஆசீர்வாதம் பெறப்பட வேண்டும் என்றும் கூறினார். இதற்கு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தினார்.

உமா ஓயா பல்நோக்கு நீர் திட்டத்தால் காணிகளை இழந்த 6 ஆயிரம் குடும்பங்களுக்கு மாத்திரம் இன்னமும் நஷ்டஈடு கிடைக்காமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரோ, இங்கு அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோது அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். உமா ஓயா பல்நோக்கு நீர் அபிவிருத்தித் திட்டத்தின் முழுமையான பணிகள் அடுத்தவருடம் ஜூன் மாதத்திற்குள் நிறைவடையும் என்றும், இதற்கமைய இந்த முதலீட்டில் அரசாங்கத்துக்கு நன்மை கிடைக்கும் முக்கிய அங்கமான மின்சார உற்பத்தியின் ஊடாக 120 மெகாவாட் மின்சாரத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் தேசிய கட்டமைப்பில் இணைக்க எதிர்பார்த்திருப்பதாகவும் இங்கு தெரியவந்தது.

அத்துடன் இதற்கு அவசியமான சகல ஒதுக்கீடுகளும் வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், இதற்கமைய எதிர்வரும் ஜூன் மாதம் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் 355 குளங்களுக்கு அவசியமான நீரை வழங்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் அனுர திஸாநாயக்க தெரிவித்தார். ஆறு வருடங்களில் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள 1200 சிறிய குளங்களை போசசையூட்டும் வகையில் 26 கிலோமீற்றர் நீளமுள்ள சுரங்கப்பாதை மற்றும் 94 கிலோமீட்டர் நீளமான வடமத்திய பிரதான கால்வாய் திட்டத்தை நான்கு வருடங்களில் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக திஸாநாயக்க குறிப்பிட்டார். இவை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் காலதாமதம் அடைந்திருக்கும் பல திட்டங்களை ஆரம்பிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐந்து வருடங்களாகத் தடைப்பட்டுள்ள சந்திரிகா வாவி ஊடாக ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் உள்ள கைத்தொழில் வலயத்துக்கு நீரை விநியோகிக்கும் ஜின் மற்றும் நில்வள திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு 2026 - 2027 ஆண்டாகும்போது அவற்றைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பது பற்றியும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. 45 கோடி கன அடி நீரைக் கொண்டுசெல்லும் இந்தத் திட்டத்தின் ஊடாக ஹம்பாந்தோட்டை, எம்பிலிப்பிட்டிய பிரதேசங்கள் பலவற்றுக்கு நீர் விநியோகிக்கப்படவுள்ளது. அத்துடன், மன்னார் உள்ளடங்களான பல பகுதிகளில் காணப்படும் நீர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு கீழ் மல்வத்து ஓயா நீர் திட்டத்தை விரைவில் பூர்த்திசெய்யவிருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

குளங்கள் உள்ளடங்கலாக நீர்ப்பாசன கட்டமைப்புக்கள் பல இராணுவத்தினர் மற்றும் தன்னார்வ அமைப்புகளைப் பயன்படுத்தி புனரமைக்கப்பட்டு வருவதுடன், அவற்றைப் பழுதுபார்க்கும் பணிகள் விரைவுபடுத்தப்படுவதன் முக்கியத்துவத்தையும் அமைச்சர் இங்கு வலியுறுத்தினார். அத்துடன் வடக்கில் உள்ள மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புதிய தொழில் நுட்பமுறை பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் ஏராளமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு, தங்கள் பகுதிகளில் தற்போதுள்ள நீர்ப்பாசன முறைகளின் பிரச்சினைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக அமைச்சரின் கவனத்தை ஈர்த்தமையுடன், அவற்றை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் வலியுறுத்தினார். கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பான அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரட்ன, மஹாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத், நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், நாளக பண்டார கோட்டேகொட, நிமல் பியதிஸ்ஸ, சிவஞானம் சிறிதரன், கலாநிதி சுரேன் ராகவன், உதயன கிரிந்திகொட, எஸ்.எம்.எம்.முஷாரப், மர்ஜான் பலீல், சாணக்கியன் ராசமாணிக்கம் மற்றும் அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

# லட்சக் கணக்கான ஏக்கர் காணி அழிக்க கோட்டா அரசு திட்டம்!

## ருவன் விஜேவர்தன குற்றச்சாட்டு

தற்போதைய அரசாங்கம் ஆட்சிப்பீடமேறியது முதலாக பெருமளவில் காடுகள் அழிக்கப்பட்டிருப்பதுடன் இன்னமும் லட்சக்கணக்கான ஏக்கர் காணிகளை அழிப்பதற்கு திட்டமிடப்பட்டுவருகிறது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் ருவன் விஜேவர்தன குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் காடழிப்பிற்கு எதிராக 'சூழலின் குரல்' என்ற அமைப்பினால் நுகேகொடை பொதுச் சந்தை தொகுதிக்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமைதிவழி போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

காடுகளைப் பாதுகாப்பதற்காக கடந்த 2001 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்த போது, 05/2001 என்ற இலக்க சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டது. எனினும் அதனை இல்லாமல்செய்திருக்கும் தற்போதைய அரசாங்கம்,



காடுகளை பெருநிறுவனங்களுக்கும் தமக்கு நெருக்கமானவர்களுக்கும் வழங்குகின்றது.

எனவே சூழலை வெகுவாக மாசடையச்செய்யும் வகையில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படாவிட்டால், எதிர்வரும் காலத்தில் நாடளாவிய ரீதியில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

# தப்பிச்சென்ற தொற்றாளர் ஒருவர் வசமாக சிக்கினார்!

*வெலிகந்தை கொவிட் - 19 சிகிச்சை நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் இரவு தப்பிச் சென்ற கொரோனா நோயாளி ஒருவர் பிடிபட்டுள்ளார்.*

*வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு பிரிவினரால் தப்பிச் சென்ற சிறிது நேரத்திலேயே அந்த நபர் வெலிகந்தை பகுதியில் பிடிபட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*இவ்வாறு தப்பிச் செல்ல முயன்ற மேற்படி நபர் ராஜாங்கனை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் ஆவார்.*

# வன்முறைகளை எதிர்கொள்ளும் பெண்களை வலுப்படுத்துவோம்!

## யாழில் விழிப்புணர்வுத் திட்டம்

'கொவிட் –19 இடர் சூழ்நிலையிலும் வன்முறைகளை எதிர்கொள்ளும் பெண்களை வலுப்படுத்துவோம்' என்னும் தொனிப்பொருளில் பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் விழிப்புணர்வுத் திட்டம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு மையம் இந்த விழிப்புணர்வு செயற்பாட்டை நேற்று 25 ஆம் திகதி ஆரம்பித்து டிசெம்பர் 10 ஆம் திகதிவரை இந்தத் முன்னெடுக்கவுள்ளது.

இதுதொடர்பில் அந்தத் தொண்டு நிறுவனம் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

பால்நிலை வன்முறைக்கு எதிரான பதினாறு நாள் விழிப்புணர்வு செயற்பாடு நேற்று புதன்கிழமை நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் வரும் டிசெம்பர் 10ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு மையமும் பெண்கள், சிறுவர்கள் நலன் சார்ந்து கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக வட மாகாணத்தில் செயற்படுகின்ற நிறுவனம் என்ற அடிப்படையில் இதே காலப்பகுதியில் ஒவ்வொரு தொனிப்பொருளில் பரந்துபட்ட அளவில் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்து வந்திருக்கின்றது.

இம்முறை கொரோனா அசாதாரண நிலைமை காரணமாக எமது செயற்பாடுகள் 'கொவிட் – 19 இடர் சூழ்நிலையிலும் வன்முறைகளை எதிர்கொள்ளும் பெண்களை வலுப்படுத்துவோம்' என்னும் தொனிப்பொருளில் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும், ஊடகங்கள் வாயிலாகவும் எமது பரப்புரைச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக பதினாறு நாள்கள் முன்னெடுக்கப்பட இருக்கின்றன.

இதன் ஆரம்ப நிகழ்வாக யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் உதவி அரசாங்க அதிபர் ம.பிரதீபனால் விழிப்புணர்வு அறிக்கை வெளியிட்டு வைக்கப்பட்டது. அத்துடன் நேற்று தொடக்கம் டிசெம்பர் 10ஆம் திகதி வரை தொடர்ச்சியாக எமது விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடு க்கப்பட இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!



சாயி தரிசனம் – 1

வே.வரதசுந்தரம்

## புட்டபர்த்தியில் ஆனைமுகத்தனுக்கு தனிச்சந்நிதி

இறைபக்திக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்கள் நாயன்மார்கள். திருநாவுக்கரசு நாயனார் திருவடிப் பேற்றின் மாண்பினை நமக்குத் தெளிவுபடுத்தியுள்ளார். சமணர்கள் அவரைச் சுண்ணாம்பு காளைவாயில் அடைத்த போது, அவர் இறைவனைத் துதித்துப்பாட அத்துன்பம் அவருக்கு இன்ப அனுபவமாக மாறியது. அச்சூழல் மாற்றமடைந்து ஐம்புலன்களுக்கும் குளிர்ச்சி தந்தது. மாசில் வீணை காதுக்கும், மாலை மதியம் கண்ணுக்கும், வீசுதென்றல் மூக்குக்கும், வீங்கி ளவேனில் உடலுக்கும், வண்டறைப் பொய்கைநீர் நாவுக்கும் இன்பம் தந்தன. திருவடிப்பேற்றின் மாண்பினை இங்கு கண்டோம்.

**மாசில வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே.**

'இறைவன் ஒருமலர். அதன் நறுந்தேனினை நுகரும் வண்டு நீங்கள்! இறைவன் கொழுகொம்பு. அதில் படரும் மென்கொடி நீங்கள்! இறைவன் விரிந்து செல்லும் வானம். ஆங்கே கண்சிமிட்டும் நட்சத்திரங்கள் நீங்கள்!

இறை நாமத்தை உச்சரிக்கின்ற உதடுளிலும் பார்க்க மக்கள் சேவையாற்றும் கரங்களை நான் கூடுதலாக நேசிக்கின்றேன். ஆனந்தமான குடும்பம் மலரவேண்டுமாயின் பகிர்ந்து கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள்.'

நாவுக்கரசர், பகவான் பாபா ஆகியோரின் இக்கருத்துக்களை எண்ணியவாறு சாயிபக்தர்கள் சாயீஸ்வர யாத்திரையை ஆரம்பிக்கின்றனர்.

புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தினுள்ளே நுழைந்ததும் அவர்களுக்குக் கிடைப்பது ஆனைமுகத்தன் தரிசனம். ஆம் அவர்கள் காண்பது ஆன்மீக அலைகளை அள்ளி வீசும் ஐந்துகரத்தன் சந்நிதி. இங்கிருந்துதான் ஆனைமுகத்தன் ஆரத்தியுடன் அதிகாலையில் நகரசங்கீர்த்தனம் ஆரம்பிக்கும். ஈற்றில் இச்சந்நிதியில்தான் ஆரத்தியுடன் பஜனை நிறைவுபெறும்.

பிரசாந்தி நிலையத்தில் விநாயகர் சதுர்த்தித் திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப் படுகின்றது. அடியார்கள், குறிப்பாக மாணவர்கள் விநாயகப் பெருமானின் பல்வேறு வடிவங்களை ஊர்வலமாக எடுத்து வந்து பகவானின் ஆசிகளைப் பெறுவர்.

பிள்ளையார் சுழிபோட்டு சுபகாரியங்களை ஆரம் பிக்கும் மரபு நம்மிடத்தே உண்டு. அப்படி ஆரம்பித்தால் எடுத்த காரியம் தடையின்றி கைகூடும் என்பது நமது அசைக்க முடியாத நம்பிக்கை. அவ்வாறே புட்டபர்த்தி புனிதத் திருத்தல நுழைவாயிலில் உள்ள விநாயகப் பெருமானை வணங்கி இவர்கள் தமது ஆன்மீக யாத்திரையைத் தொடங்குவர்.

உலகின் முதலாவது, மூத்த சுருக்கெழுத்தாளர் யார் தெரியுமா? அவர் வேறு யாருமல்லர், விநாயகப் பெருமானேதான்! ஆம், மகாபாரதக் கதையைத் தன் மனத்திரையில் உருவாக்கிவிட்டு வியாசர் அதனை எப்படி, யார் எழுதித் தருவார் என்று யோசித்தார். அந்த உதவியைச் செய்து தருமாறு கணேசப் பெருமானை வேண்ட, வியாசர் கண்முன் விநாயகப் பெருமானே தோன்றி வேண்டுதலை நிறைவேற்றினார். அவ்வாறு பணியாற்றும் போது, எழுத்தாணி உடைந்து போகிறது. உடனே கருமம் தடைப்படக்கூடாது என்பதற்காகத் தந்தங்களில் ஒன்றை ஒடித்துத் தன்பணியை நிறைவுசெய்தார். அதன் காரணமாக விநாயகப் பெருமானை ஏகதந்தன், ஒற்றைக் கொம்பன் என்று அழைக்கின்றோம். இது தியாகத்தைக் குறிக்கும். இத்தியாகம் மூலம் மகாபாரதக் கதையை எழுதி நமக்குத் தந்தார். இதனை விளக்கும் அடிகளைப் பாரீர். 'தவளமாமருப் பொன்றொடித்தொரு கரத்திற் தரித்து உயரகிரிப் புறத்தெழும் கவளமா களிற்றின் திருமுகம் படைத்த கடவுளை நினைத்துக் கைதொழுவோம்'.

புட்டபரத்தியில் நடைபெறும் சாயி பஜனைகள் விநாயகரை ஏத்தும் பாடலுடனேயே ஆரம்பமாகும். அதே போன்று அனைத்துலக சாயிநிலையங்களிலும் வியாழன் தோறும் பஜனைகள் விநாயகரைத் துதிக்கும் பாடலுடன் தொடங்கும். விநாயகரைப் பற்றிபாபா கூறும் கருத்துக்களை செவிசாய்ப்போமா?

'விநாயகரை மூஷிக வாகனன் என்போம். எலி அறியாமையை, ஆசைகளை, இருளைக் குறிப்பது. எனவே அவர் எலியைத் தனது ஊர்தியாக ஏற்று அடியார்களின் அறியாமை இருளைப் போக்குகிறார்.

விநாயகரின் களிறுபோன்ற தலை வேகத்தை நினைவூட்டும். யானை வேறெந்த மிருகத்திலும் பார்க்க பெரியது. யானையின் பாதங்களைப் போன்று வேறெந்த மிருகத்திற்கும் பாரிய பாதங்கள் இல்லை. விவேகத்தைப் போன்று நன்றியுணர்ச்சி உடையது யானை. தனது பாகனை எந்த சூழ்நிலையிலும் மறவாப் பண்புடையது. சாகும் தருணத்திலும் தனது பாகனின் குரலைக் கேட்டதும் தனது தும்பிக்கையை தூக்கும். நன்றி உணர்வில்லாத விவேகம் பயன்தராது என்பதை விநாயகர் வழிபாட்டில் நாம் அறிகிறோம். தனது வாழ்க்கைப் பாதையில் தன்முன்னேற்றத்திற்கு உதவிய கரங்களை மனிதன் எக்காலத்தும் காப்பாற்ற வேண்டும்.



விநாயநர் ஓர் இலட்சிய புருர். இலட்சிய வாழ்வை உங்களுக்குத் தருவார். இறைவன் மகிழும் காரியங்களில் ஈடுபடுங்கள். நீங்கள் நாவடக்கம் பேணுவீர்களானால் இறைவன் மகிழ்வான். உயிரினங்களை வெறுக்காதீர்கள்.

'விநாயகர் அருள் பெற்று ஆசைகளைக் கட்டுப்படுத்தி, அஞ்ஞான இருளில் இருந்து விடுதலைப் பெறுங்கள்'

**நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்**
**கற்குஞ் சரக்கன்று காண்!'**

(தொடரும்)

## பேருவளை பிரதேச சபை உறுப்பினருக்கு கொரோனா!

பேருவளை பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு, கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தர்காநகர் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரது வீட்டார் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர், சாரதி ஆகியோரை அவர்களது வீடுகளில் சுய தனிமைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தொற்றாளராக அடையாளம் காணப் பட்ட பிரதேச சபை உறுப்பினர் சென்றார் எனக் கூறப்படும், பேருவளை பிரதேச சபையின் தர்கா நகர் உப காரியாலயத்தை, டிசெம்பர் மாதம் 07 ஆம் திகதிவரை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

## ரணிலுக்குப் பதிலாக ருவான்!

### ஐ.தே.க. உறுப்பினர்கள் கோரிக்கை



ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற ஆசனத்தை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ள மறுத்தால், பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தனவை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என கட்சியின் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற வெற்றிடத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துமாறு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்த போதும், அவர் அதனை மறுத்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுகின்றது.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற ஆசனத்தைக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொள்ள மறுத்தால், பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தனவை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என கட்சியின் சில உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கட்சியின் நாடாளுமன்றத் தேசியப்பட்டி யல் விடயம் தொடர்பாக அடுத்த வாரம் இறுதித் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து விலகுவதாக அகிலவிராஜ் காரியவசம் வழங்கிய இராஜிநாமாக் கடிதத்தையும் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

## திருமலை மீனவர் கடலில் உயிரிழப்பு



திருகோணமலை - திருக்கடலூர் பகுதியில் இருந்து நேற்று அதிகாலை படகொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மீன்பிடிப்பதற்காக சிறிய படகொன்றின் மூலம் நான்கு பேர் கடலுக்குச் சென்றுள்ளனர் எனவும், அவர்களில் ஒருவரே குறித்த படகு விபத்தில் உயிரிழந்துள்ளார் எனவும் காவற் துறையினர் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் திருகோணமலை, திருக்கடலூர் ஹர்தாஸ் வத்த பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் எனவும் காவற்துறையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்த மீனவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுக காவற்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொது இடங்களில் ஒன்றுகூடி நினைவேந்தல் நடத்த முடியாது

## யாழ். நீதிவான் நீதிமன்றம் கட்டளை

யாழ்ப்பாணம், நவ.25

பொது இடங்களில் மக்கள் ஒன்றுகூடி நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த முடியாது என யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

மாவீரர் நாள் நினைவேந்தலைத் தடை செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கே யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இந்தக் கட்டளையை வழங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாத அமைப்பாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளதால், அந்த அமைப்பின் நினைவு நாளை நடத்துவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது எனவும் நீதிமன்றம் இதன்போது தெரிவித்துள்ளது.

நவம்பர் 27ஆம் திகதி உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்குத் தடை விதிக்கக் கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு இன்று முற்பகல் 11 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, நீண்ட வாதப்பிரதிவாதங்கள் நடந்தன. அதனைத் தொடர்ந்து, வழக்கின் தீர்ப்பு பிற்பகல் 3 மணிவரை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. தீர்மானத்திலிருந்து விலகிவிட்டோம்; இலங்கையுடன் சர்வதேசம் முட்டி மோதாது!

## சபையில் அடித்துக் கூறியது ராஜபக்ஷ அரசு

இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானத்தின், இணை அனுசரணையில் இருந்து இலங்கை தற்போது விலகியுள்ளது. எனவே, சர்வதேச ரீதியாக எந்தவொரு பிரச்சினையும் நாட்டுக்கு ஏற்படாது.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று இடம்பெற்ற 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் மீதான குழு நிலை விவாதத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

நல்லாட்சி அரசால்தான் நாடு கடந்த காலங்களில் காட்டிக்கொடுக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக சர்வதேசத்தினரால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு அவர்கள் அன்று இணை அனுசரணை வழங்கினார்கள்.

இது உலகிலேயே எங்கும் நடக்காத ஒரு விடயமாகும். இது இராணுவம் பெற்றுக் கொடுத்த அனைத்து வெற்றிகளையும் காட்டிக்கொடுக்கும் செயற்பாடாகும்.

எனினும், நாம் ஆட்சிக்கு வந்தவுடன் அந்த இணை அனுசரணையில் இருந்து விலகியுள்ளோம். எனவே, இதனால் நாட்டுக்கு எந்தவொரு ஆபத்தும் வராது.

இதனைக் கடந்த ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த அரசு நாட்டுக்கு செய்த அநியாயத்தை மாற்றியமைக்கும் பொருட்டே, எமது ஆட்சியைக் கொண்டுவந்தார்கள்.

நாம் பயங்கரவாதத்தைத் தோற்கடித்தவுடன், ஐ.நா.வின் அன்றைய பொதுச் செயலாளர் இலங்கைக்கு வந்தார்.

ஆனால், நாம் அவருடன் அன்று எந்த வொரு ஒப்பந்தங்களையும் செய்துகொள்ள வில்லை. மாறாக இணைந்த பத்திரிகையாளர் மாநாடொன்றை



நடத்தி, ஒருங்கிணைந்த கருத்துக்களை மட்டும்தான் வெளியிட்டோம்.

இதனைத் திரிபுபடுத்தி, சொந்த நாட்டுக்கு எதிராகவே கருத்து வெளியிடக் கூடாது. நாடாளுமன்றுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், சர்வதேசம் என்று வரும்போது நாம் அனைவரும் ஒன்றிணைந்து தான் ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டும்.

- என்றார்.

# பிட்டுக் கதைக்கு யாழ். நீதிமன்றத்தில் மன்னிப்புக் கேட்ட பொலிஸ் அதிகாரி!



பிட்டுச் சாப்பிட்டு வந்த யாழ்ப்பாணத்தவர்களை பீட்ஸா சாப்பிட வைத்தோம் என்று யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் தான் கூறிய கருத்து தமிழ் மக்களைக் காயப்படுத்தியிருந்தால் அதற்காக இன்று திறந்த நீதி மன்றத்தில் பகிரங்க மன்னிப்புக் கோரினார் யாழ். மாவட்டத் தலைமை பொலிஸ் அதிகாரி பிரசாத் பெர்னாண்டோ.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மாவீரர் நாள் நிகழ்வை நடத்துவதற்கு 37 பேருக்கு எதிராகத் தடை கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது நடந்த விசா ரணையின் நடுவே இந்த மன்னிப்புக் கோரல் சம்பவமும் இடம்பெற்றது.

கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் பொறுப்பதிகாரிகளால் தாக்கல் செய்யப்பட்ட இந்தத் தடை கோரல் மனுக்கள் மீதான விசாரணைக்காக கொழும்பு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து மூத்த உதவி சொலிஸ்சிட்டர் ஜெனரல் கரிப்பிரிய ஜெயசுந்தர வருகை தந்திருந்தார். மூத்த உதவி சொலிஸ்சிட்டர் ஜென ரல் பிரபாகரன் குமாரரட்ணம், மூத்த அரச சட்டவாதி ஜனக பண்டார ஆகி யோரும் அவருடன் வருகை தந்திருந்தினர்.

மனுக்கள் மீதான தனது சமர்ப்பணத்தை முடித்துக் கொண்ட மூத்த சொலிஸ்சிட்டர் ஜெனரல் கரிப்பிரிய ஜெயசுந்தர, தனது முகக் கவசத்தை அகற்றித் முழுமையாகத் தனது முகத்தை அங்கிருந்த சட்டத்தரணிகளுக்கும் ஏனையவர்களுக்கும் காட்டிய பின்னர், தான் யார் என்பதை அவர்கள் அனைவரும் பார்ப்பதற்காக அப்படிச் செய்தார் என்பதைக் குறிப்பிட்டார். பின்னர், துரதிஷ்டவசமாக இந்த நீதிமன்றத்திலே நடந்த ஒரு வழக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத் தலைமைப் பொலிஸ் அதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தெரிவித்த ஒரு கருத்து இந்த நீதிமன்றம், இங்கிருக்கும் சட்டத்தரணிகள் மற்றும் மக்களைக் காயப்படுத்தியிருந்தால் அதற்காகப் பொலிஸ் அதிகாரி சார்பில் தான் பகிரங்க மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றார் என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் உணவுக் கலாசார பழக்க வழக்கங்களைக் குறிப்பிட்டுக் காயப்படுத்தும் நோக்கத்தோடு அவர் அந்தக் கருத்தைத் தெரி விக்கவில்லை என்றும், முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க இப்போது நிலைமை முன்னேற்றம் அடைந்திருக்கின்றது என் பதைத் தெரிவிப்பதே அவரது உள்நோக் கமாக இருந்தது என்றும், எனினும் தவறுதலாகப் பிழையானதொரு உதாரணத்தை அவர் எடுத்துக் கையாண்டு விட்டார் என்றும், அந்தத் தவறுக்காகத் தமது மன்னிப்பை ஏற்றுக்கொள்ளுமா றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கரிப்பிரியவின் அந்தக் கருத்தைத் தொடர்ந்து தனது முகக் கவசத்தையும் அகற்றித் தனது முகத்தை முழுமையாக வெளிப்படுத்தி பொலிஸ் அதிகாரி பிரசாத் பெர்னாண்டோ, அங்கிருந்த சட்டத்தரணிகளையும் சபையையும் பார்த்து இரண்டு தடைவைகள் 'சொறி' (மன்னித்துக்கொள்ளுங்கள்) என்று தெரிவித்தார்.

விவாதத்தின் நடுவே இதற்குப் பதில ளிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்த மூத்த சட்டத்தரணி ந.சிறீகாந்தா, பொலிஸ் அதிகாரி தெரிவித்த கருத்து நீதிமன்றத்தில் இருந்த சட்டத்தரணிகளைப் பொறுத்த வரையில் ஒரு பொருட்டாக இருக்கவில்லை என்றார். அது குறித்து வெளியே எந்த வகையிலான கருத்துக்கள் பகிரப்பட்டாலும் அது இந்த நீதிமன்றத்திலே யாரையும் பாதிக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

# ரிஷாத்துக்குப் பிணை



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் இன்று பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் அவர் இன்று ஆஜர்ப்படுத்தப்பட்டபோது பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் ரூபா காசுப் பிணையிலும், தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் அவரை விடுதலை செய்யுமாறு நீதிவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அரச பணத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி – தேர்தல் சட்டத்தை மீறி இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள் மூலம் புத்தளத்தில் இருக்கும் வாக்காளர்களை மன்னாருக்கு அழைத்துச் சென்றுள்ளார் என்று முன்னாள் அமைச்சர் ரிாத் பதியுதீன் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதனை அடிப்படையாகக் கொண்டு, பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த ஒக்டோபர் 19ஆம் திகதி ரிஷாத் பதியுதீன் தெஹிவளையில் மறைந்திருந்தபோது கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹெரொயின், 5 துப்பாக்கிகளுடன் இலங்கைப் படகில் ஏழு பேர் கைது

## தூத்துக்குடி கடல் பகுதியில் சம்பவம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.25

இந்தியாவின் தூத்துக்குடி கடல் பகுதியில் அனுமதியின்றி சுற்றித்திரிந்த இலங்கை படகினை இந்தியக் கடலோரக் காவல் படையினர் சுற்றிவளைத்துச் சோதனை செய்ததில் பல கோடி ரூபா பெறுமதியான சுமார் 100 கிலோ ஹெரோயின் மற்றும் ஐந்து துப்பாக்கிகளுடன் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின் றது.

பறிமுதல் செய்யப்பட்ட போதை பொருள் மற்றும் படகு என்பன நாளை காலை தூத்துக்குடி கடலோர காவல் படை முகாமை அடைந்த பின்பே முழுமையான விவரம் அறியக் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட ஏழுபேரும் இலங்கை நீர்கொழும்பைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

# ஆணைக்குழு நியமனங்கள் தொடர்பில் சபையில் கேள்வி எழுப்ப முடியாதாம்!

இப்படிக் கூறுகின்றார் சபாநாயகர்



அரச சேவை ஆணைக்குழுவின் நியமனங்கள் தொடர்பான அதிகாரங்கள் ஜனாதிபதிக்கே உள்ளன. அதுதொடர்பில் சபையில் கதைக்க முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்ன தலைமையில் கூடிய போது, அரச சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்கள் தொடர்பாக எதிர்க் கட்சி உறுப்பினர் மனு நாணயக்காரவால் எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினைக்கு பதிலளிக்கும் போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார். மனு நாணயக்கார எம்.பி ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து தெரிவிக்கையில் –

அரச சேவை ஆணைக்குழுவிற்கான நியமனங்கள் தொடர்பான பெயர் விவரங்கள் நாடாளுமன்றம் ஊடாக அனுப்பப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகி இருக்கின்றது. அந்தப் பெயர்களில் நாட்டில் வியாபாரத்துடன் தொடர்புடைய பரிசோதனை உபகரணங்களைக் கொண்டு வருவதற்கான மனுக்கோரலை மேற்கொண்டுள்ள நிறுவனமொன்றின் உரிமையாளர் ஒருவரின் பெயர் உள்ளது.

இவ்வாறானவர்களை அரச சேவை ஆணைக்குழுவுக்கு நியமிக்கும் போது அரச அதிகாரிகளுக்கு ஏதேனும் அழுத்தங்கள் ஏற்படாது என்று எங்களுக்கு கூற முடியாது. – என்றார்.

இதன்போது குறுக்கிட்ட சபாநாயர், ஆணைக்குழு தொடர்பாக சபையில் பேச முடியாது. இது சபையில் பேச வேண்டிய விடயம் அல்ல. தயவு செய்வு அதனை நிறுத்துங்கள். – என்றார்.

அதனைத்தொடர்ந்து ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவிக்கையில், அரச ஔடதங்கள் ஒழுங்குப்படுத்தல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக 5 லட்சம் ரெபிட் எச்.ஐ.வி. பரிசோதனை உபகரணங்களை கொண்டு வருவதற்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்கான வேலைத் திட்டமொன்று இடம்பெறுகின்றது என தெரிவித்துக்கொண்டிருக்கையில், சபாநாயகர் குறுக்கிட்டு உங்களின் கருத்தை புரிந்துகொண்டோம். உங்களுக்கு அது தொடர்பாக பேச முடியாது என்று மீண்டும் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து மீண்டும் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து தனது கருத்தை மனு நாணயக்கார எம்.பி, தெரிவிக்கையில், அரசசேவை ஆணைக்குழு தொடர்பாக எப்படி இந்த நாடாளுமன்றத்தில் கேட்க முடியாது என்று கூற முடியும். – என்றார். இதற்கு பதிலளித்த சபாநாயகர், அது பற்றி பேசும் அதிகாரம் உங்களுக்கு இல்லை. அதனை நியமிக்கும் முழுமையான அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது என்றார்.

# பெண் உத்தியோகத்தர் தாக்கு முகாமையாளர் கைதாகினார்!

நிர்வாக உதவியாளர் ஒருவரை தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய மேல்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உடுகம்பொல அலுவலகத்தின் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அலுவலகமொன்றில் பணிப்புரியும் பெண் மீது உயர் அதிகாரியொருவர் தாக்குதல் நடத்தினார் எனத் தெரிவிக்கப்படும் காணொலி சமூக வலைத்தளங்களில் வெளியானது.

இந்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பெண்ணை தாக்கிய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், அவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் எனவும் குறிப்பிடப்பிடப்படுகின்றது.

# சீனாவுடனான முதலீட்டு ஒப்பந்தம் சபையில் அநுர கேள்விக் கணை!

சீனாவுடன் அரசாங்கம் செய்துள்ள 450 ஏக்கர் முதலீட்டு உடன்படிக்கை என்ன என்பதையும், இந்த தொழிற்சாலையின் உற்பத்தி தேசிய சந்தையை இலக்கு வைக்குமா என்பதையும் அரசாங்கம் சபைக்கு அறிவிக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக சபையில் கோரிக்கை விடுத்தார்.

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் 32 நிறுவனங்களின் நிதி ஒதுக்கீடுகள் பற்றி விவாதம் இடம்பெறும் நிலையில் அமைச்சுக்குப் பொறுப்புக்கூறக்கூடிய அமைச்சர் சபையில் இல்லாதமையானது நாடாளுமன்றம் தொடர்பாக ஜனாதிபதியின் பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அதிகாரத்துக்கு கீழ் செயற்படும் நிறுவனங்ளுக்காக நிதி ஒதுக்கீட்டு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வர முன்னர் கொடுத்த வாக்குறுதிகள் அவரால் மீறப்பட்டுள்ளன. அதேபோல் அரசமைப்பை அவர் இரு சந்தர்ப்பங்களில் மீறியுள்ளார். 20 ஆம் திருத்தத்துக்கு முன்னர் அரசமைப்பின் பிரகாரம் எந்தவொரு ஜனாதிபதியால் எந்தவோர் அமைச்சையும் கையாள முடியாது, ஆனால் அவர் பாதுகாப்பு அமைச்சைத் தன்வசம் வைத்திருந்தார்.

அதேபோல் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையில் இடைக்கால கணக்கறிக்கை மூலமாக நிதி ஒதுக்கப்பட்டது. அதன்பின்னர் நாடாளுமன்றத்தில் நிதி அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அரசமைப்பின் சில திருத்தங்களைக் காட்டி ஜனாதிபதியால் நிதி அதிகாரங்களைக் கையாள முடியும் எனக் கூறினார்கள்.

அதனை ஏற்றுக்கொண்டாலும் கூட ஜனாதிபதியால் கடன்களைப் பெறஎந்தவோர் அனுமதியும் இல்லை. ஆனால் ஏப்ரல் மாதம் தொடக்கம் ஒகஸ்ட் மாதம் வரையில் 69 கோடி ரூபா கடன்களை ஜனாதிபதி பெற்றுக்கொண்டார். இவை இரண்டுமே அரசமைப்பை மீறும் செயற்பாடாகும்.

அரச நிறுவனங்களின் அதிகாரிகளை நியமிப்பதில் தனித்துவமான குழுவொன்றே தீர்மானம் எடுக்கும் எனக் கூறினார், ஆனால் கூறியதற்கு மாறாக முற்று முழுதாக அரசியல் தலையீடுகளே இடம்பெற்று வருகின்றன. தமக்குத் தேவையான சகலரையும் அரச நிறுவனங்களுக்கு நியமித்து வருகின்றார்.

அதேபோல் உறவினர்களை இணைத்துக்கொள்ள மாட்டேன் எனக் கூறியவர் இன்று சிவில் விமான சேவைகள் திணைக்களம், பிரதமர் அலுவலக பிரதானி உள்ளிட்ட பல நிறுவனங்களுக்கு அவரது உறவினர்களை நியமித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக விவாதம் இடம்பெற்று வருகின்றது, ஆனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிதாக அமைச்சுக்கள் சில உருவாக்கப்பட்டுள்ளன என வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக இந்த வரவு – செலவு திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

புதிய அமைச்சுக்களை உருவாக்க வேண்டும் என்றால் 20 ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்ட பின்னர் உருவாக்கியிருக்க முடியும். வரவு – செலவுத் திட்டத்தின் போது எவ்வாறு புதிய அமைச்சுகளை உருவாக்க



முடியும்? அதுமட்டுமல்ல பாதுகாப்பு அமைச்சின் விவாதம் இடம்பெறுகின்றது, ஆனால் அமைச்சரோ பிரதி அமைச்சரோ சபையில் இல்லை. ஜனாதிபதியின் கீழ் 32 நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் விவாதம் இடம்பெற்று வருகின்றது.

ஆனால் இவற்றுக்குப் பொறுப்புக்கோரும் நபர் ஒருவர் இந்த நாடாளுமன்றத்தில் இல்லை, இதன் மூலமாக வெளிப்படுவது என்னவென்றால் நாடாளுமன்றம் தொடர்பாக ஜனாதிபதியின் பொறுப்பற்ற தன்மையேயாகும். நாடாளுமன்றம் என்ன செய்தாலும் தனக்குக் கவலையில்லை என்ற நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்துகின்றார்.

அதேபோல் அரசாங்கம் தற்போது சீனாவுடன் மேற்கொண்டுள்ள 450 ஏக்கர் முதலீட்டு உடன்படிக்கையில் தொழிற்சாலை ஒன்று உருவாக்கப்படுகின்றது. இந்த தொழிற்சாலை எதுவாக இருந்தாலும் இது தேசிய சந்தையையும் இலக்கு வைக்குமா என்பதை இந்த சபைக்கு அரசாங்கம் அறிவிக்க வேண்டும். சீனாவின் சந்தை என்பது மிகப்பெரியது. அவ்வாறு இருக்கையில் குறித்த நிறுவனம் எதுவாக இருந்தாலும் அது இலங்கையின் தேசிய சந்தையை இலக்கு வைக்குமானால் இலங்கையில் செயற்படும் ஏனைய சகல தொழிற்சாலைகளும் நெருக்கடியை சந்திக்கும் நிலை உருவாகும். எனவே சீனா முதலீட்டு உடன்படிக்கை என்ன என்பதை அரசாங்கம் சபைக்கு அறிவிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

# வடக்கு, கிழக்கு விகாரைகளை பாதுகாக்க நடவழக்கை வேண்டும்

## புத்திக பத்திரன தெரிவிப்பு

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பௌத்த விகாரைகள் பாரிய பின்னடைவினை சந்தித்துள்ள காரணத்தால் அவற்றை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தமிழ் பௌத்தர்கள், தமிழ் வேடுவர் சமூகத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன சபையில் தெரிவித்தார். இராவணன் வரலாற்றை மீண்டும் ஆராய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

வடக்கு கிழக்கில் பௌத்த விகாரைகள் பாரிய பின்னடைவுகளைக் கண்டுள்ளன. வடக்கில் உள்ள பௌத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பாக எமது ஆட்சியில் மாநாடுகளைக் கூட நடத்தினோம். இன்றும் வடக்கு கிழக்கில் பௌத்த தேரர்களுக்கு பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. நாக விகாரையில் அறநெறி வகுப்புக்கள் கூட இடம்பெறுவதில்லை.

வடக்கில் தமிழ் பௌத்தர்கள் உள்ளனர். அவர்களுக்குக் கூட தேவையான ஒத்துழைப்புகள் கிடைப்பதில்லை. பல்வேறு தரப்பின் தலையீடுகள் இதில் ஏற்பட்டுள்ளன. அதேபோல் வடக்கு கிழக்கில் உள்ள பௌத்த விகாரைகளுக்கு இராணுவத்தின் ஒத்துழைப்பு இல்லையென்றால் அவர்களுக்கான பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

கிழக்கில் அம்பிட்டியே சுமண தேரர் தொடர்பாகப் பல்வேறு கருத்துகள் எழுந்துள்ளன. அவர் பேசும் முறைமை, அவரது நடவடிக்கைகள் தொடர்பாக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் விமர்சனங்கள் எழுந்தன. ஆனால் அவர் ஏன் அவ்வாறு நடந்து கொள்கின்றார் என்பதை பார்க்க வேண்டும். கிழக்கில் பல்வேறு விகாரைகளில் மத நடவடிகைகளுக்குத் தடைகள் ஏற்பட்டுள்ளன.

எனவே தெற்கின் நாடாளுமன்ற உறுப்பினராக நான் இருந்தாலும் வடக்கு கிழக்கில் பௌத்த விகாரைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நினைக்கின்றேன். வடக்கில் மிக குறைந்த அளவிலான விகாரைகளே உள்ளன. அவற்றில் பல விகாரைகளுக்குத் தேரர்கள் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. எனவே அரசாங்கம் இவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதேபோல் பௌத்த வரலாறு கலாசாரங்களைப் பேணுவதுடன் இராவணன் வரலாறுகளை, கலாசாரங்களை தோண்டியெடுக்க வேண்டும். வரலாறுகளை ஆராய வேண்டும்.

ஒரு மட்டத்துடன் அனைத்தையும் பொய்யாக்கி விடக் கூடாது. எல்லாமே ஏதோ ஒருவரலாற்றை வலியுறுத்தி வருகின்றன. அதேபோல் இந்த நாட்டின் மூதாதையரின் சமூக பாதுகாப்பு உறுதிபடுத்தப் பட வேண்டும்.

சிங்கள வேடுவர், தமிழ் வேடுவர் மற்றும் நீண்ட காலமாக இலங்கையில் வாழும் சீன இலங்கையர்கள், நீக்கிரோ இலங்கையர்கள் ஆகியோர் என சகலரையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

# ஊடக சுதந்திரத்தை ஒடுக்கும் நோக்கில் செயற்படுகின்றது கோட்டாவினது அரசு!

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

அரசாங்கம் தமக்கு எதிராக விமர்சனக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளாது ஊடகங்களை அடக்கி, ஊடகவியலாளர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது எனவும் இந்த ஆட்சியில் இப்போது வரையில் அண்ணளவாக 200 சமூக ஊடகவியலாளர்கள் அல்லது சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறுகையில் -

சமூக ஊடகங்கள் செயற்படும் விதம் தொடர்பாக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் கடந்த காலங்களில் பாரிய கலந்துரையாடல் ஒன்று சமூகத்தில் ஏற்பட்டுள்ளது. தற்போதும் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பாகக் குற்றப்புலனாய்வுத்துறை கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இந்த நாட்டு மக்களின் கருத்து சுதந்திரம், தகவல் பரிமாற்றம் உரிமைகளுக்கு இடமுண்டு என இலங்கையின் அரசமைப்பு தெளிவாக உறுதிப்படுத்துகின்றது. எனவே அரசாங்கம் மீதான மக்களின் விமர்சனங்களையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

சமூக ஊடகங்களில் முன்வைக்கும் விமர்சனங்கள் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமென கூறி அவர்களின் பின்னால் விரட்ட வேண்டாம். சமூக ஊடகங்களில் பதியப்படும் விமர்சனக் கருத்துக்கள் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஒரு சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களுக்கு இவ்வாறான தண்டனைகளை வழங்குவோம் எனவும் கூறுகின்றார். பொலிஸ்மா அதிபர் எவரையும் தண்டிக்க முடியாது, இது நீதிமன்றம் செய்யவேண்டிய காரியமாகும்.

இப்போது வரையில் 200 இற்கு அதிகமான சமூக ஊடகவியலாளர்கள் அல்லது செயற்பாட்டாளர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் யுரேகா டி சில்வா எனும் ஊடகவியலாளர் தற்போது மெல்போர்னில் வசித்து வருகின்றார். அவர் இலங்கையில் பிரபல ஊடகங்களில் பணியாற்றிய ஓர் ஊடகவியலாளர், அவர் முகப்புத்தகத்தில் ஒருவர் இட்ட பதிவை பகிர்ந்தார் என்பதற்காக அவர் இலங்கைக்கு வந்தால் விமானநிலையத்தில் அவரை கைது செய்ய வேண்டும் என குடிவரவு -குடியகல்வு திணைக்களதுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

இவையெல்லாம் மிகவும் மோசமான செயற்பாடுகளாகும். ஊடக சுதந்திரத்தை அழிக்கவோ ஊடகவியலாளர்களை ஒடுக்கவோ, கட்டுப்படுத்தவோ நடவடிக்கை எடுக்க வேண்டாம். இதனை விடவும் முக்கியமான பிரச்சினைகள் நாட்டில் உள்ளது, அதற்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுப்பதை விடுத்து ஊடக சுதந்திரத்தை அழிக்க வேண்டாம். - என்றார்.

# ஐ.டி.எச். வைத்தியசாலை தாதிக்குக் கொரோனா!

கொழும்பு, நவ. 26

கொழும்பு அங்கொடை ஆதார வைத்தியசாலையில் (ஐ.டி.எச்.) கடமையாற்றிவரும் தாதியொருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும் அந்தத் தாதி ஐ.டி.எச். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றாளர்களிடமிருந்து அவருக்கு வைரஸ் தொற்று ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

இதனையடுத்து, அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் அனைவரையும் தனிமைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான பல நோயாளிகள் ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி நில அதிர்வு பற்றி ஆய்வறிக்கை சமர்ப்பிப்பு!

கண்டி மாவட்டத்தின் சில பகுதிகளில் உணரப்பட்ட நில அதிர்வு தொடர்பான நிபுணர்களின் ஆய்வறிக்கை சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கண்டி, அளுத்வத்தை, அம்பாங் கோட்டை, திகன, மயிலப்பிட்டி, அனுரவத்தை, ஹரவத்தை முதலான பிரதேசங்களில் கடந்த 18ஆம் திகதி இந்த நில அதிர்வு உணரப்பட்டிருந்தது. அந்தப் பகுதிகளில் இதற்கு முன்னரும் நில அதிர்வு பதிவாகியிருந்த நிலையில், இது தொடர்பாக ஆராய்வதற்காக ஆறு பேர் அடங்கிய நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவான நீண்ட ஆய்வுகளின் அடிப்படையில் தமது அறிக்கையை விடயத்துடன் தொடர்புடைய அமைச்சரிடம் நேற்று முன்தினம் கையளித்துள்ளது.

இந்தப் பகுதிகளில் உள்ள சுண்ணாம்பு கற்பாறைகளில் ஏற்பட்ட வெடிப்பால் இந்த அதிர்வு ஏற்பட்டதாக கூற முடியாது என நிபுணர் குழு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேற்படி நில அதிர்வு தொடர்பில், தொடர்ந்தும் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நிபுணர்குழு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், அந்தப் பகுதியில் உள்ள பொது மக்களினதும் நீர்த்தேக்கங்களினதும் பாதுகாப்பு கருதி, செயற்படுத்தப்பட வேண்டிய சில பரிந்துரைகளையும் நிபுணர்குழு முன்வைத்துள்ளது.

# அரியவகை மான் கண்டுபிடிப்பு!



புத்தளம் - நாத்தாண்டிய பிரதேச செயலகத்திற்குட்பட்ட தப்போவ பகுதியில் அரியவகை சந்தனம் நிறம் கொண்ட சருகு மான் ஒன்று அப்பகுதி மக்களால் உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் வனஜீவராசிகள் பிராந்திய அலுவலக அதிகாரிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

அந்த அரியவகை சந்தனம் நிறம் கொண்ட குறித்த சருகு மானை பிடித்த பிரதேசவாசிகள் அது தொடர்பில் புத்தளம் வன ஜீவராசிகள் பிராந்திய அலுவலக அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதிக்கு விஜயம் செய்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அந்த சருகு மானை மீட்டு வனஜீவராசிகள் பிராந்திய அலுவலகத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட சருகு மானை நிகவெரட்டிய மிருக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தின் புத்தளம் பிராந்திய அலுவலகத்திற்குப் பொறுப்பான உதவி அதிகாரி சஞ்சீவ வீரசேகர தெரிவித்துள்ளார்.

# புயலால் யாழில் இதுவரையில் 96 பேருக்கு பாதிப்பு

(ந.லோகதயாளன்)

நிவர் புயல் காரணமாக யாழ்ப்பாணத்தில் இதுவரை 27 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேர் பாதிப்படைந்துள்ளனர் என யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் மேலும் விவரம் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணத்தில் இதுவரை 103 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு சில பகுதிகளில் காற்றின் தாக்கமும் காணப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையில் இதுவரை 27 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேர் பாதிப்படைந்துள்ளனர். அதேபோன்று இரண்டு வீடுகள் முழுமையாக சேதமடைந்தமையோடு 19 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என இதுவரை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் பருத்தித்துறை பகுதியிலேயே அதிகளவில் 11 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும் அறிக்கையிடப் பட்டுள்ளது. - என்றார்.

# சஹ்ரான் போன்றோரை உருவாக்குவோரை அழிக்கவே கோட்டா ஆட்சிக்கு வந்தார்!

## விமல் வீரவன்ஸ முழக்கம்



சஹ்ரான் போன்றவர்களை தண்டிப்பது மட்டுமல்ல அவர்களை உருவாக்கும் அரபிய பாடசாலைகள், மதரஸாக்களையும் முழுமையாக அழிக்கவே ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தார், ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை வெளிவந்தவுடன் உடனடியாக இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் விமல் வீரவன்ஸ சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அதிகாரத்துக்கு கீழ் செயற்படும் நிறுவனங்களுக்காக நிதி ஒதுக்கீட்டு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில் -

கடந்த ஆட்சியில் தேசிய பாதுகாப்பு சகல விதத்திலும் பலவீனமடைந்தது, ஆனால் இன்று அவ்வாறு எந்தவொரு பலவீன செயற்பாடுகளும் இடம்பெறவில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எமக்கு நல்லதொரு முன்னுதாரணமாக உள்ளார்.

ஜனாதிபதி - பிரதமரின் தலைமைத்துவம் நாட்டின் யுத்தத்தை வெற்றிகொண்டதைப் போலவே இன்று நாட்டின் சவால்களை வெற்றிகொள்ளவும் எதுவாக அமைந்துள்ளது.

இந்த நாட்டில் இன்று சட்டம் எவரதும் தனிப்பட்ட தேவைக்காகவும் வளைந்து கொடுக்காதுநிலைநாட்டப்பட்டுவருகின்றது. விடுதலைப்புலிகளின் நினைவேந்தலை கோரி சுமந்திரன் வழக்கொன்றில் ஆஜரானார். ஆனால் அவர்களின் சட்டதர்க்கங்கள் எல்லாமே நிராகரிக்கப்பட்டு சட்டம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

இதுவே கடந்த காலமாக இருந்திருந்தால் விடுதலைப் புலிகளுக்கு சட்டம் வளைந்திருக்கும். ஈஸ்டர் தாக்குதல் இந்த நாட்டில் எவ்வாறான மாற்றத்தை உருவாக்கியது என்பதை அனைவரும் தெரிந்திருப்பார்கள், தேசிய பாதுகாப்பின் வெற்றிடம் என்ன என்பதையும் அதனை நிறைவேற்ற கோட்டபாய ராஜபக்ஷவை மக்கள் தெரிவு செய்யவும் காரணமாக அமைந்தது.

ஜனாதிபதியை அதிகாரத்துக்குக் கொண்டுவந்த மக்கள், ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளை எப்போது தண்டிப்பார்கள் என எதிர்பார்த்துக்கொண்டுள்ளனர், அதேபோல் சஹ்ரான் போன்றவர்களை உருவாக்க காரணமானவர்களையும், அராபிய பாடசாலைகள், மதரஸா பாடசாலைகள் என்ற பெயரில் சஹ்ரான் போன்றவர்களை உருவாக்க காரணமான நபர்களையும் தண்டிக்க வேண்டும். பௌத்த, கிறிஸ்தவ அறநெறி பாடசாலைகளில் ஏனைய மதத்தவரை கொலைசெய்ய வேண்டும் எனக் கற்பிப்பதில்லை,

இந்து அறநெறி பாடசாலைகளில் இவ்வாறு ஏனைய மதத்தவரை கொலை செய், கழுத்தை வெட்டு எனக் கற்பிப்பதில்லை. விடுதலைப்புலிகள் பயங்கரவாதம் இருந்தபோதும் அதற்கும் இந்து ஆலயங்களுக்கும் எந்தத் தொடர்பும் இருந்ததில்லை. ஆனால் இந்த விடயத்தில் அவ்வாறு அல்ல, மத நடவடிக்கைகளில் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்றனர்.

அராபி பாடசாலை என்ற பெயரில், மதரஸா என்ற பெயரில் எதனை கற்பிக்கின்றனர் என எவருக்கும் தெரிவதில்லை. எனவே சஹ்ரான் போன்றவர்களைத் தண்டிப்பது மட்டுமல்ல அவர்களை உருவாக்கும் இவ்வாறான மத செயற்பாடுகளையும் முழுமையாக அழிக்கவே ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தார்.

இப்போது ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன, அவர்களின் அறிக்கை வெளிவந்தவுடன் உடனடியாக இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நாட்டில் சிங்கள, இந்து, கிறிஸ்தவ மக்கள் நிம்மதியாக மத நடவடிக்கைகளை முன்னெடுக்கும் சூழலை உருவாக்கிக் கொடுப்பதே எமது நோக்கமாகும். - என்றார்.

## நினைவேந்தலுக்குத் தடை கோரி பொலிஸ் நேற்று மீண்டும் வழக்கு

### பருத்தித்துறை நீதிமன்றின் கட்டளை இன்று அறிவிப்பு

மாவீரர் நினைவு நாளில் அஞ்சலி செலுத்துவதைத் தடை செய்யுமாறு கோரி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் நேற்று மீண்டும் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குக்கான கட்டளையை நீதிமன்றம் இன்று வழங்குவதாக அறிவித்துள்ளது.

ஏற்கனவே நினைவேந்தல் நிகழ்வைத் தடை செய்யுமாறு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, அதன் பின்னர் இடம்பெற்ற வாதங்களின் பின்னர் பொலிஸார் தாமாகவே முன்வந்து வழக்கில் இருந்து விலகுவதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில் நேற்று மீண்டும் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். நேற்று மாலை வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது குறித்த வழக்கின் எதிராளிகள் சார்பில் வி.மணிவண்ணன் தலைமையிலான சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

அதன் பின்னர் குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன. எனினும், இந்த வழக்கின் கட்டளையை இன்று வழங்குவதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# வேலையில்லாப் பட்டதாரிகள் நேற்று ஊவா மாகாணசபை முன் போராட்டம்

பதுளை, நவ.26

பதுளை நகரில் ஊவாமாகாண சபைக்கு முன்பாக நேற்று ஊவா மாகாணத்தை சேர்ந்த வேலையில்லாத பட்டதாரிகளால் அமைதியான முறையில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஊவாமாகாணத்தின் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஆசிரியர்கள் தெரிவுக்காக பட்டதாரிகளிடையே போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் –

இதுவரையில் போட்டி பரீட்சைக்கு தோற்றிய சிலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்த போதும், பரீட்சையில் தெரிவாகியுள்ள 853 பட்டதாரிகளுக்கான நியமனங்கள் இன்னும் வழங்கப்படவில்லை.

ஊவா மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 1,283 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனவும் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு பட்டதாரிகளுக்கு உரிய அதிகாரி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் ஊவாமாகாண ஆளுநருடன் கலந்துரையாடப்பட வேண்டும் எனத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டநிலையில்,

ஆளுநருடன் கலந்துரையாட போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் மூவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதனையடுத்து இந்தப் பிரச்சினைக்கு ஊவாமாகாண ஆளுநர் விரைவில் தீர்வு பெற்றுதர நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## முல்லையில் நினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நினைவேந்தலை நடத்துவதற்கு 46 பேருக்கு தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தது.

இவ்வாறு நீதிமன்றதத்தால் வழங்கப்பட்ட தடைக் கட்டளையை மீள்பரிசீலனை செய்யுமாறு கோரி, தடைக் கட்டளை வழங்கப்பட்டவர்கள் சார்பில் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா, முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட 14 பேர் கொண்ட குழுவினரால் 23ஆம் திகதி நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் அன்றைய தினம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இடம்பெற்ற இந்த வழக்கு விசாரணைகளில் மாவீரர் நாளுக்கான தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டோருக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், சட்டத்தரணிகளான எஸ்.தனஞ்சயன், ருஜிக்கா நித்தியானந்தராஜா, திரு மதி துஷ்யந்தி சிவகுமார், ஹாரிஸ், உள்ளிட்ட சட்டவாளர்கள் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

இந்தநிலையில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக மன்றில் முன்வைக்கப்பட்ட விடயங்களை கேட்ட நீதிபதி வழக்கின் கட்டளையை வழங்க வழக்கை நேற்று தவணையிட்டிருந்தார்.

இந்தநிலையில் கொழும்பிலிருந்து விமானம் மூலம் வருகை தந்த சட்டமா அதிபர் திணைக்கள சிரேஷ்ட சட்டத்தரணிகள் மூவரும், முன்னாள் பொலிஸ் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான ருவன் குணசேகரவும், முல்லைத்தீவு மாவட்டத்தின் பொலிஸ் உயர் அதிகாரிகள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் திறந்த நீதிமன்றிலே குறித்த நினைவேந்தல் நிகழ்வுக்கு அனுமதி வழங்கப்படக் கூடாது, தடையுத்தரவு நீடிக்கப்பட வேண்டும் என்ற தமது தரப்பு நியாயங்களை முன்வைத்தனர்.

இதையடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு 46 பேருக்கு வழங்கப்பட்ட தடையுத்தரவை எதிர்வரும் 30ஆம் திகதி வரை நீடித்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

## கொரோனாவினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொவிட் – 19 வைரஸ் பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

கொரோனா வைரஸ் தொற்றினால் இறக்கும் பெரும் பாலானோருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என் பது மரணிக்கும் வரையில் தெரியாது. இதனால் கொரோனா நோய் அறிகுறிகள் காணப்படும் ஆரம்பத்திலேயே வைத்தியசாலைக்கு சென்று அது தொடர்பிலான சந்தேகத்தை தெளிவுபடுத்திக் கொள்வது மிகவும் பொருத்தமானது.

கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் வீடுகளில் இறப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவருகின்றன. இந்த கொரோனா நோய் விசேடமாக நுரையீரலில் ஏற்படுகிறது. நுரையீரலில் இந்த தொற்று ஏற்பட்டு சிலவேளைகளில் அதற்கான அறிகுறிகள் உங்கள் உடம்பில் காணக்கூடியதாக இருக்காது. இந்த நோயினால் பயங்கரமான நிலைமையில் இருக்கின்றீர்களா? என்பது குறித்து கண்டறிவதற்கு வழியுண்டு. பொதுவாக ஒருவர் உடலில் இரத்தத்தில் ஒட்சிசனின் அளவு 95% க்கு மேற்பட்டதாக இருக்கும்.

நுரையீரலில் இந்த தொற்று நோய் ஏற்பட்ட பின்னர் உடம்பில் பரவும் போது உடலில் ஒட்சிசனின் அளவு 93%மாக குறைவடையும். இதனால் ஒட்சிசன் அளவை பரிசோதித்து அறிந்து கொண்டால் இந்த நோயை கட்டுப்படுத்திக் கொள்ளமுடியும். சிகிச்சை உண்டு. – என்றார்.

# விக்டோரியா நீர்த்தேக்கம் குறித்து விசேட கவனம்

கண்டியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை தொடர்ந்து விக்டோரியா நீர்த்தேக்கம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஓகஸ்ட், செப்ரெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் தொடர்ந்து கண்டியின் சில பகுதிகளில் சிறியளவில் நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டமைக்கான காரணம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை, விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், நிலைமை தீவிரமாக இல்லாவிட்டாலும், சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு அதிகாரிகள் தயாராக இருப்பார்கள் என சுற்றுச்சூழல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'இதை இலகுவாக எடுத்துக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு நிபுணர் குழுவொன்று இந்த விடயம் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டுவருவதுடன், தொடர்ந்தும் அந்தக் குழுவை விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

## வாக்குறுதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எச்சரிக்கை விடுத்தார்.

போரின் பின்னர் நாட்டின் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசு இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் கொடுத்த வாக்குறுதிகளை ஒருபோதும் மீற முடியாது என வும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 11 ஆண்டுகளாக நாட்டு மக்களையும் சர்வதேச சமூகத்தையும் இலங்கை அரசு ஏமாற்றிக்கொண்டுள்ளது எனவும் அவர் நினைவுறுத்தினார்.

2015ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட ஐ.நா. தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியமை குறித்து ஜனாதிபதிக்கோ எவருக்குமோ தெரியாது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறுவது உண்மையென்றால், எவ்வாறு 34/1, 41 ஆகிய ஐ.நா. தீர்மானங்களுக்கு அரசு இணை அனுசரணை வழங்கியது? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

வெகுஜன ஊடகத்துறை , வெளிவிவகார அமைச்சுகள் மற்றும் பிராந்திய உறவு அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே சுமந்திரன் எம்.பி. இந்த விடயங்களை ஆணித்தரமாக வெளிப்படுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கையின் முன்னைய அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது. இப்போது புதிய அரசு தீர்மானத்திலிருந்து நீங்குவதாகத் தெரிவித்துள்ளது. இந்தச் செயற்பாடுகள் என்பது ஒவ்வொரு அரசுக்கும் இடையில் மாறுபட வேண்டிய விடயம் அல்ல. இது நிலையான அரசியல் கொள்கையாக இருக்க வேண்டும். சர்வதேச மட்டத்தில் இவை மோசமான விதத்திலேயே விளைவுகளை ஏற்படுத்தும்.

இந்த அரசு தீர்மானத்திலிருந்து விலகுவதாகக் கூறினாலும் அதற்கான அறிக்கையை வாசித்தாலும் அவ்வாறு தீர்மானத்திலிருந்து விலக முடியாது என்பது எம் அனைவருக்குமே தெரியும்.

அதேபோல் 2015 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு அரசு இணை அனுசரணை வழங்கியது என்பது குறித்து ஜனாதிபதிக்கோ எவருக்குமோ தெரியாது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறுவது உண்மையென்றால், எவ்வாறு 34/1, 41 ஆகிய தீர்மானங்களுக்கு அரசு இணை அனுசரணை வழங்கியது?

2014 ஒக்டோபரில் முதல் தீர்மானம் முன்வைக்கப்பட்டது. 41 என்ற தீர்மானம் 2019ஆம் ஆண்டில் மார்ச் மாதத்தில் கொண்டுவரப்பட்டது. இடையில் மூன்று சந்தர்ப்பங்களில் ஒரே மாதிரியான தீர்மானம் முன்வைக்கப்பட்டது. அவ்வாறு இருக்கையில் ஜனாதிபதிக்கு இந்தத் தீர்மானங்கள் குறித்தோ, இதன் உள்ளடக்கம் குறித்தோ எதுவுமே தெரியாது என எவ்வாறு கூற முடியும்? இலங்கை என்ற நாடாக, அல்லது இராச்சியமாக முன்னெடுக்கும் வேலைத்திட்டம் தெரியாது என ஜனாதிபதியால் எவ்வாறு கூற முடியும். எனவே, இப்போது பிரேரணையில் இருந்து நீங்குவீர்கள் என்றால் அது பெரியளவில் பிரச்சினையை உருவாக்கும்.

1987ஆம் ஆண்டு இந்தியாவுடன் சர்வதேச உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டோம். அது இலங்கை – இந்திய ஒப்பந்தம் எனக் கூறப்படும். இது குறித்து ஒவ்வொருவர் ஒவ்வொரு கதையைக் கூறுவார்கள். ஆனால், நீங்கள் வெளிவிவகார அமைச்சர் இந்த உடன்படிக்கையில் இருந்து நீங்குவதாகக் கூறுவீர்களா? வலுக்கட்டாயமாக இது திணிக்கப்பட்டது என்றால் நீங்கள் நீங்கலாம். ஆனால், நீங்கள் அவ்வாறு செய்ய முடியாது.

இந்த உடன்படிக்கை தொடர்ந்தும் செயற்பாட்டில் உள்ளது. சகல மக்களது கலாசாரங்களை உள்ளடக்கிய விடயங்கள் உள்ளன. வடக்கு, கிழக்கு பகுதிகள் தமிழர்களின் பூர்வீக பூமி. இவையே இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படை விடயங்கள். இந்த உடன்படிக்கையில் இருந்து நீங்கள் விளங்கிக்கொள்ள முடியாது. அதேபோன்றுதான் ஜெனிவா விடயத்தில் மூன்று சந்தர்ப்பங்களில் அரசு வாக்குறுதி கொடுத்துள்ளது. அதுமட்டும் அல்ல மஹிந்த சமரசிங்கவும் அங்கு பல வாக்குறுதிகளைக் கொடுத்துள்ளார். அரசியல் தீர்வு அவசியம் என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார். அவரும் இன்று அரசுடன் உள்ளார்.

தமிழ்க் கட்சிகள், ஏனைய தரப்புகளை இணைந்துக்கொண்டு தீர்வுகளை வழங்குவதாகவும், நல்லிணக்க நடவடிக்கைகளை எடுப்பதாகவும் ஜனாதிபதி அப்போது கூறினார். 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும், அதனையும் தாண்டிய அதிகாரப் பகிர்வு வழங்குவதாக வாக்குறுதி கொடுத்துள்ளீர்கள். இந்த வாக்குறுதிகள் கொடுத்து 11 ஆண்டுகள் ஆகின்றன.

சர்வதேச சமூகத்துக்கு நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை எவ்வாறு உங்களால் மீற முடியும்? முடிந்தால் இப்போது கடிதம் ஒன்றை எழுதி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறிய விடயங்களை நாம் நிராகரிக்கிறோம், அவற்றில் இருந்து நீங்குகின்றோம் எனப் கூறிப் பாருங்கள்.

நீங்கள் சர்வதேச சமூகத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் அதற்கான பாரிய விளைவுகளை அரசு சந்தித்தாக வேண்டும். வாக்குறுதிகளை ஒருபோதும் மீற முடியாது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். 11 ஆண்டுகளாக இந்த நாட்டு மக்களை ஏமாற்றிக்கொண்டுள்ளீர்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் யோசனை ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதில் இராணுவ தீர்வு இறுதியான தீர்வு அல்ல, அரசியல் தீர்வே முக்கியமானது எனப் பல சந்தர்ப்பங்களில் வாக்குறுதியளிக்கப்பட்டது. இந்தியாவுக்கும் இந்த வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வு ஒன்றை நோக்கி நகர்வதாக ஜனாதிபதி வாக்குறுதி அளித்தார்.

சகல மக்களும் ஏற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பேன் எனப் பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி வாக்குறுதியளித்தார். அரசியல் தீர்வு, சம வுரிமை, சமத்துவம் என சகலதுமே கிடைக்கும் என ஜனாதிபதி தெரிவித்தார். அப்போதைய வெளிவிவகார அமைச்சர் புதுடில்லியில் கொடுத்த வாக்குறுதிகளை நினைவுபடுத்த விரும்புகின்றேன். தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சுகளை நடத்துவதாகவும், 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் தீர்வுகளை வழங்குவோம் எனவும் 2012 ஆம் ஆண்டில் கொடுத்த வாக்குறுதியை நான் நினைவுபடுத்துகின்றேன். எனவே, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பது அரசு கையாள வேண்டிய விடயமாகும் – என்றார்.

# உள்நாட்டு விசாரணைக்கு இணங்காவிட்டால் சர்வதேச விசாரணைகள் இடம்பெற்றிருக்கும்!

## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருக்கிறார்



இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆராய உள்நாட்டு விசாரணைக்கு இணங்கி இருக்காவிட்டால் சர்வதேச விசாரணை இடம்பெற்றிருக்கும் என லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் ஒன்று நிரைவேற்றப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்று வரும் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பிலிருந்து அமெரிக்கா வெளியேறியது. இருப்பினும் தற்போது ஜனாதிபதியாக ஜோ பைடன் தெரிவாகியுள்ள நிலையில் எதிர்வரும் காலங்களில் அதே நிலைமை தொடராது என்றும் லக்ஷமன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அதிகார பகிர்வை வழங்கினால் நாடு பிளவுபடாது என்றும் மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்குவதால் அனைவரும் ஒற்றுமையாக இருக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

## கொழும்பு - கொம்பனித் தெருவில் ஒரேநாளில் 90 பேருக்கு கொரோனா!

கொம்பனித் தெருவில் ஒரேநாளில் 90 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கொவிட் - 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நேற்றைய தினம் 458 கொரோனா நோயாளிகள் பதிவாகினர். அவர்களில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

அதன்படி கொழும்பு மாவட்டத்தில் 259 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர் என கொவிட் - 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அவர்களில் கொம்பனித் தெருவைச் சேர்ந்த 90 பேர் அடங்குகின்றனர் எனவும் அந்த செயற்பாட்டு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

## மின்கல தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் இரண்டு யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் திறப்பு







யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உலக வங்கி அனுசரணையுடன் புத்தாக்க மின்கல (பற்றரி) தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் இரண்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் துறைகள் இணைந்து முன்னெடுக்கும் பற்றரி ஆராய்ச்சிக்கென நவீனமயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடங்களின் திறப்புவிழா நேற்றுக் காலை இடம்பெற்றது. யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், முன்னாள் விஞ்ஞான பீடதிபதியுமான பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா இந்த ஆய்வுகூடங்களைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன், ஏகெட் திட்டத்தின் நிதிப் பணிப்பாளர் க. கனகரட்ணம், பௌதிகவியல் துறைத் தலைவர் கலாநிதி தி. பத்மதாஸ், இரசாயனவியல் துறைத் தலைவர் கலாநிதி பி. ஐங்கரன் மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, சுகாதார நடைமுறைகளுக்கு அமைய மிகவும் எளிமையாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அரிசோனா அரச பல்கலைக்கழகம் - அமெரிக்கா, சால்மேர்ஸ் தொழிநுட்பப் பல்கலைக்கழகம் - சுவீடன், தேசிய விஞ்ஞான நிறுவனம் - கண்டி, விஞ்ஞானபீடம், யாழ் பல்கலைக்கழகம் என்பவற்றின் கூட்டு ஆராய்ச்சித் திட்டமாக எளிதில் கிடைக்கக்கூடிய சோடியம் மற்றும் மக்னீசியத்தினை பயன்படுத்தி, புத்தாக்கமாக பல சவால்களை எதிர்கொண்டு, மேம்பாடான, உற்பத்திச் செலவு குறைந்த எளிதில் கிடைக்கக்கூடிய பற்றரிகளின் தொழில்நுட்பமானது வடிவமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்னால் தனிநபர் போராட்டம்



கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் போராட்டத்தை முன்னெடுத்தார்.

குறித்த போராட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் மாவட்ட செயலகம் முன்பாக இடம்பெற்றது.

தனது காணியின் ஊடாக கழிவுநீர் வாய்க்கால் ஒன்றை அமைக்க கரைச்சி பிரதேச சபை தவிசாளர் முற்பட்டார் எனவும், அதற்கு மாவட்ட அரச அதிபர் தெளிவான பதிலை வழங்க வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தே குறித்த நபர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் நேற்று செயலகம் வருகை தராத நிலையில் மாவட்ட மேலதிக அரச அதிபர் சிறிமோகன் குறித்த நபருடன் கலந்துரையாடினார்.

தீர்மானம் எடுக்கக்கூடியவர் அரச அதிபர் என்பதால் அவர் வருகை தந்ததும் அவருடன் பேசி தீர்வைப் பெற்றுக்கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் தெரிவித்த நிலையில் குறித்த போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

## கண்டி நகரில் கொரோனா உச்சம்; அனைத்துப் பாடசாலைகளும் பூட்டு

கண்டி நகரில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் மூடப்படவுள்ளன என்று மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே அறிவித்துள்ளார்.

அதன்படி நாளை வியாழக்கிழமை தொடக்கம் டிசம்பர் 4ஆம் திகதி வரை கண்டி நகர பகுதியில் உள்ள 45 பாடசாலைகளை இவ்வாறு மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் அறிவித்துள்ளார்.

கண்டியில் கடந்த சில நாள்களாக சடுதியாக அதிகரிக்கும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை



**மணமகன் விவரம்**
பிறந்த திகதி - 1991.10.17
மதம் - இந்து V
நட்சத்திரம் - திருவோணம்
பாவம் - 26
செவ் - 08இல்
கல்வி - பொறியியலாளர்
தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண் தேவை

**மணமகள் விவரம்**
பிறந்த திகதி - 1990.06.14
மதம் - இந்து V
நட்சத்திரம் - சதயம்
பாவம் - 31 1/2
சூ/செவ் - ------
கல்வி - பட்டதாரி Bsc
தொழில் - ஆசிரியை
எதிர்பார்ப்பு - பட்டதாரி உத்தியோகம் தேவை

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

## கொரோனாவுக்குப் பின்னரான உலகம் இயற்கைக்கான தருணம்

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 1-30, 2020




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

**விளம்பர அனுசரணை:-** காலைக்கதிர் Kalaikkathir